
உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சைவநீதி
# SAIVANEETHI

| மலர் 07 | சுபானு - ஆனி | JUNE - JULY 2003 | இதழ் 03 |
|---|---|---|---|



தொண்டர் நாள்தொறுந் துதிசெய
அருள்செய்கே தீச்சர மதுதானே

எழுபத்தைந்தாவது இதழ்

ரூபா 25/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவநீதி மாத இதழ்

### பெறுமதி விபரம்

தனிப்பிரதி ரூபா 25.00 ஆண்டொன்றிற்கு ரூபா 250.00 ஏனைய நாடுகளில்
ஆண்டொன்றிற்கு ஸ்ரேலிங் பவுண் 10 அல்லது US$ 15

சைவநீதியின் வளர்ச்சியில் உங்கள் பங்களிப்பு என்ன என்பதை நாம் ஆவலுடனும் எதிர்பார்க்கிறோம்.

சந்தா அனுப்பவேண்டிய முகவரி:



*C. Navaneethakumar*
No30,Ramya Road, Colombo-04,
Sri Lanka.
T'Phone No: 580458


# பொருளடக்கம்


பக்

01. சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய திருவெண்ணெய் நல்லூர் ....03
02. சைவ சித்தாந்த கலாநிதி செந்திநாதையர் ....06
03. விவேக சிந்தாமணியிலிருந்து ....09
04. வீரபத்திரக் கடவுள் சரப வடிவங்கொண்டது ....10
05. பதினெண் சித்தர்கள் ஸ்ரீ சீர்காழி சட்டநாதர் ....11
06. ஆறுவது சினம் ....12
07. காரைக்கால் அம்மையாரின் பக்தி வைராக்கியம் ....13
08. உமாபதி சிவத்தின் தத்துவச் சிந்தனை ....15
09. ஈழநாட்டு மாதோட்ட நன்னகர்த் திருக்கேதீச்சரம் ....20
10. சிவப்பிரகாசம் ....27
11. அன்பழிப்பு - அன்பளிப்பு ....30
12. சிவாலயங்களில் துவாரபாலகர்கள் ....33
13. சைவ பூஷணம் தமிழ் விளக்கம் ....36
14. நினைவிற் கொள்வதற்கு


சைவநீதி இதழில் வெளிவரும் கட்டுரைகளிலுள்ள கருத்துக்களுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர். -இதழ் நிர்வாகிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

AUG 2003



# சைவநீதி

மலர் 7 : சுபானு : ஆவணி : [illegible] இதழ் – 75

நிறுவுநர்:
சைவப்புலவர், [illegible],
[illegible], வித்துவான்.
திரு. வ. செல்லையா

ஆலோசனைக்குழு:

சிவஸ்ரீ கு. நகுலேஸ்வரக்குருக்கள்

திரு. D. M. சுவாமிநாதன்
அறங்காவலர்,
ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானம்

திரு. அ. கந்தசாமி
Chairman U.P.S.

திரு. சு. பாலசிங்கம்

பதிப்பாசிரியர்:
திரு. வே. திருநீலகண்டன்
ஜோதி அச்சகம்

ஆலோசகர்:
திரு. அ. சிவநேசம்
ஓய்வுபெற்ற கோட்டக் கல்வி அதிகாரி

நிர்வாக ஆசிரியர்:
திரு. செ. நவநீதகுமார்
30, [illegible] ரோட், கொழும்பு-04.

தொடர்பு: 7.30 p.m. to 7.30 a.m.

தொலைபேசி: 580458

எழுபத்தைந்தாவது இதழாக இம்மாதம் சைவநீதி வெளி வருகின்றது. இது பெருஞ்சாதனையாக எமக்குத் தோன்றுகிறது. சமய சஞ்சிகைகளுக்கு சமூகத்தில் ஆதரவு அற்பம். அதிலும் சைவச் சஞ்சிகைக்கு சமூகத்திலே சிலரின் ஆதரவு மாத்திரம் உண்டு. கட்டுரைகள் சேகரித்து வடிவமைத்து அச்சேற்றி மாதா மாதம் வெளியிடுவதும் சிரமமான பணி. அதனை விற்பனை செய்வது அதைவிடச் சிரமம். சைவநீதி இவ்வளவு காலமும் நிலைத்திருப்பதற்கு, நல் மனம் படைத்த சில சைவப் பெருமக்களின் உதவியும் சந்தா நேயர்களின் ஆதரவும் மூல காரணமாகும்.

ஒவ்வொருவரும் தமது சமயத்தில் பற்று உடையவராய் இருத்தல் வேண்டும். தமது சக்திக்கு ஏற்றவாறு சமயப் பணி செய்தல் வேண்டும். சமய நூல்களைக் கற்று அறிவைப் பெருக்க வேண்டும். பிறரும் சமய அறிவு பெறும் பொருட்டு ஆவன செய்து கொடுத்தல் வேண்டும். விழாக்களின் மூலம் பொருளையும் காலத்தையும் வீணே போக்காது பயனுள்ள விடயங்களைக் கற்றும் பிறருக்கும் அவற்றைப் போதித்தும் சைவ வாழ்வு வாழ்ந்து ஒரு சீரிய சமுதாயத்தை உருவாக்க வேண்டும்.

சைவ ஒழுக்கம் பேணும் சமூகத்திற்கு சமய அறிவைப் போதிப்பதே எமது கடமை. இவ்வழியில் கடந்த ஆறு வருடங்களாகச் சைவநீதியின் பணி விரிவடைகின்றது. இனி வரும் காலத்திலும் சைவநீதி சிறப்புடன் வெளி வந்து சைவ மணம் பரப்ப அனைவரது ஆதரவும் எமக்குத் தேவைப்படுகிறது. சைவநீதி வளர்ச்சியடையும் போது எமது சமயப் பணி மேலும் விரிவடையும். பவள இதழ் மூலம் வாசக உள்ளங்களைச் சந்திப்பதில் மகிழ்கிறோம். சைவநீதியின் பணி வருங்காலத்தில் சிறப்புற இறைவன் திருவருளை வேண்டி நிற்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
23 ஆவது குரு மகா சந்நிதானம்
**சீரவளர்சீர் சிவப்பிரகாச தேசிக**
**பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்**

திருவாவடுதுறை - 609 803.
(நாகப்பட்டினம் மாவட்டம்)
தொலைபேசி எண்: 04364 - 232021

நாள்: 24-06-2003

நமச்சிவாய வாஅழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க



# அருள் வாழ்த்துரை

"மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகம் எல்லாம்"
- கந்தபுராணம்

வேதாந்தத்தின் தெளிவாகிய சைவசித்தாந்தம், அனைத்து நெறிகளிலும் மேன்மை கொண்டது சைவநீதி என்று போற்றுகிறது.

சைவநீதி, உலகியல் சார்ந்த தெய்வங்களையும் [illegible] மார்க்கங்களும், [illegible] நின்று சிறந்து விளங்கும். திருஞானசம்பந்தர் 'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்' என உலகியலைக் கூறி, 'எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலை' என்று வீட்டு நெறியையும் உடன் கூறினார்.

இலங்கை வாழ் சான்றோர்களின் சைவத்தமிழ் பேரவைத் [illegible] திரு. வ. செல்லையா அவர்களைத் தொகுப்பாசிரியராகவும் திரு. வே. திருச்செல்வம் அவர்களைப் பதிப்பாசிரியராகவும், திரு. செ. நவநீதகுமார் அவர்களை நிர்வாக ஆசிரியராகவும் கொண்டு வெளிவருகிற சைவநீதி என்னும் இதழ், [illegible] இதழாக வெளிவருகிறது. இவ்விதழ் மேலும் சிறப்புடன் வெளிவர [illegible] இவ்விதழின் ஆசிரியர்கள் [illegible] உடல் நலமும் [illegible] திரு வாழ்வும் [illegible] திருவருளை [illegible] சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# அகத்தியர் தேவாரத்திரட்டு

## 3. சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியது

பண்-இந்தளம்

### திருவெண்ணெய் நல்லூர்

### ஏழாம் திருமுறை

### குருவருள்

திருச்சிற்றம்பலம்

பித்தாபிறை சூடிபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
அத்தாவுனக் காளாயினி யல்லேனென லாமே. 01

நாயேன்பல நாளும்நினைப் பின்றிமனத் துன்னைப்
பேயாய்த்திரிந் தெய்த்தேன்பெற லாகாவருள் பெற்றேன்
வேயார் பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
ஆயாவுனக் காளாயினி யல்லேனென லாமே. 02

மன்னேமற வாதேநினைக் கின்றேன் மனத் துன்னைப்
பொன்னேமணி தானேவயி ரம்மேபொரு துந்தி
மின்னார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
அன்னேயுனக் காளாயினி யல்லேனென லாமே. 02

முடியேனினிப் பிறவேன்பெறின் மூவேன் பெற்றமூர்தீ
கொடியேன்பல பொய்யேயுரைப் பேனைக்குறிக் கொண்ணீ
செடியார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
அடிகேளுனக் காளாயினி யல்லேனென லாமே. 04

பாதம்பணி வார்கள்பெறு பண்டமது பணியாய்
ஆதன்பொரு ளானேனறி வில்லேனரு ளாளா
தாதார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
ஆதீயுனக் காளாயினி யல்லேனென லாமே. 05

தண்ணார்மதி சூடீதழல் போலுந்திரு மேனீ
எண்ணார்புர மூன்றுமெரி யுண்ணநகை செய்தாய்
மண்ணார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
அண்ணாவுனக் காளாயினி யல்லேனென லாமே. 06

ஊனாயுயி ரானாயுட லானாயுல கானாய்
வானாய்நில னானாய்கட லானாய்மலை யானாய்
தேனார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
ஆனாயுனக் காளாயினி யல்லேனென லாமே. 07

ஏற்றார்புர மூன்றுமெரி யுண்ணச்சிலை தொட்டாய்
தேற்றாதன சொல்லித்திரி வேனோசெக்கர் வானீர்
ஏற்றாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
ஆற்றாயுனக் காளாயினி யல்லேனென லாமே. 09

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழுவாள்வல னேந்தீமறை யோதீமங்கை பங்கா
தொழுவாரவர் துயராயின தீர்த்தலுன தொழிலே
செழுவார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
அழகாவுனக் காளாயினி யல்லேனென லாமே. 09

காரூர்புன லெய்திக்கரை கல்லித்திரைக் கையால்
பாரூர்புக ழெய்தித்திகழ் பன்மாமணி யுந்திச்
சீரூர்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
ஆரூரனெம் பெருமாற்கா ளல்லேனென லாமே. 10

திருச்சிற்றம்பலம்

---

01. பித்தனே! பிறையைச் சூடியவரே! தலைவரே! அருளுடையவரே! எக்காரணங் கொண்டும் உன்னை மறவாமல் உன்னை நினைத்துக் கொண்டிருக்கின்றவனாகிய எனது உள்ளத்திலே உன்னை வைத்துக் கொண்டவரே! பெண்ணையாற்றின் தென் கரையிலுள்ள திருவெண்ணெய் நல்லூர்த் திருவருட்டுறைபெருங் கோயிலில் வீற்றிருக்கும் என் தந்தையே! நாயேன் இனியும் உனக்கு ஆள் அல்லேன் - அடிமையல்லேன் எனல் பொருந்துமோ?

02. நாயேன் நெடுநாட்களாக நின்னை நினையாதவனாய் இருந்தேன். பேய் போலத் திரிந்து இளைத்தேன். எனினும் நின் கருணைத் திறத்தால் பெறுதற்கரியதாகிய நின்னருளைப் பெற்றேன். மூங்கில்கள் வளருகின்ற கரையையுடைய பெண்ணை ஆற்றின் தென் புறத்திலுள்ள திருவெண்ணெய் நல்லூர்த் திருவருட்டுறையுள் வீற்றிருக்கும் ஆயே (ஆய் - தாய்) இனியும் உனக்கு நாயேன் அடிமையல்லேன் எனல் பொருந்துமோ?

03. உன்னை அதிகம் மறவாமல் மனதில் நினைக்கின்றேன். பொன்னை, மணியை, வயிரத்தை மோதி அலை வீசியெறிவதால் பெருகும் பெண்ணையாற்றின் தென்கரையில் உள்ள திருவெண்ணெய் நல்லூர்த் திருவருட்டுறையுறை தூயே! இனியும் உனக்கு நாயேன் அடிமையல்லேன் எனல் பொருந்துமோ?

04. இடபத்தில் ஏறி வருபவரே! நின்னருளால், நான் இறவேன், பிறவேன், முதுமையடைய மாட்டேன். பேய்போல மேலவனாகிய என்னையே குறித்து ஆட்கொண்டவர். வேடர்கள் நிறைந்த பெண்ணையாற்றின் தென் கரையிலுள்ள திருவெண்ணெய் நல்லூர் அருட்டுறையிலுள்ள பெருமானே! இனியும் உமக்கு நான் அடிமையல்லேன் எனல் பொருந்துமோ?

05. அருளுடையவரே! அறிவில்லாதவனாகிய யான், அறிவில்லாத ஒருவன் எனப்படும் பொருள் (செல்வம்) போன்றவனானேன். எனவே, உம்முடைய திருவடியைத் தொழுகின்றவர்கள்

[illegible] 101
[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுகின்ற பண்டம் போலப் பற்றி என்னைச் சோறும் கொள்ளும் கட்டளையிட்டருளினீர். பூந்தாழைகள் நிறைந்து கிடக்கின்ற பெண்ணையாற்றின் தென்பாலுள்ள திருவெண்ணெய் நல்லூர் திருவருட்டுறையிலுள்ள ஆதியானவரே! இனியும் உமக்கு நான் அடிமையல்லேன் எனல் பொருந்துமோ?

06. குளிர்ச்சி பொருந்திய சந்திரனைத் தரித்தவரே! நெருப்புப் போன்ற திருமேனியை உடையவரே! பகைவருடைய முப்புரங்களும் தீப்பற்றியெரியும்படி சிரித்தவரே! பூமியிற் சிறந்து விளங்குகின்ற பெண்ணையாற்றங் கரையின் தென்பால் விளங்குகின்ற திருவெண்ணெய் நல்லூர் திருவருட்டுறையும் விமலனே! இனியும் உமக்கு நான் அடிமையல்லேன் எனல் பொருந்துமோ?

07. தேன் பாய்கின்ற பெண்ணையாற்றங்கரையின் தென்பால் அமைந்துள்ள திருவெண்ணெய் நல்லூர்த் திருவருட்டுறையுள் எல்லாமாயுள்ளவனே! நீயே ஊனாயினாய்; உயிருமாகினாய்; உடம்புமாகினாய்; உலகமாயினாய்; வானமானாய்; பூமியானாய்; மண்ணானாய்; மலையானாய் இப்படியிருக்கவும் நானுனக்கு இனியும் அடிமையல்லேன் எனல் பொருந்துவதோ?

08. பகைவரது புரங்கள் மூன்றையும் தீயுண்ண வில்லைத் தொட்டவரே! தெளிவற்ற பொருள்களைப் பேசித் திரிவேனோ? அந்திவண்ணரே! கங்கையைச் சடையில் ஏற்றவரே! (ஏற்றைப் - இடபத்தை உடையவரே என்றுமாம்) திரும் பெண்ணையாற்றின் தென்பாலமைந்த திருவெண்ணெய் நல்லூர்த் திருவருட்டுறையுள் உள்ள (எம்பிரானும்) ஆற்றைக் காப்பவரே! நானுனக்கு இனியும் அடிமையல்லேனெனல் பொருந்துமோ?

09. மழுவாகிய வாட்படையை வலக்கரத்தேந்தியவரே! வேதங்களைத் தந்தவரே! உமாதேவியாரை இடப் பக்கத்தில் பங்காகக் கொண்டவரே! உன்னைத் தொழுகின்றவர்களது துன்பங்களைத் தீர்த்தருளுவது உனது தொழில் அல்லவா. செழுமை பொருந்திய நீரையுடைய (வார் - நீர்) பெண்ணை நதித் தென்பாலுள்ள திருவெண்ணெய் நல்லூர் அருட்டுறையுள் உள்ள அழகனே! நானுனக்கு இனியும் அடிமையல்லேன் எனல் பொருந்துவதோ?

10. காரிலிருந்து (கார் - முகில்) இறங்கிய நீரையுடைய (பெண்ணை) நதியை வாரி (அடைந்து) திரையாகிய கரங்களினால் பணை கவிப்ப (கரையை அடைந்து) பல வகை மணிகளைத் தள்ளிக் கொண்டு (உந்தி) வந்து வீசிப் பூமியெங்கும் பரக்கும் புகழைப் பெற்ற சிறப்புடைய பெண்ணையாற்றின் தென்பாலுள்ள திருவெண்ணெய் நதிக்கரை அருட்டுறையுள் வீற்றுள்ள திருப்பெருமானாகிய அவனுக்கு இனியும் நான் அடிமையல்லேன் எனல் பொருந்துவதோ? அருட்டுறையுள் எம்பெருமானுக்கு ஆரூரனாகிய (நான்) ஆளல்லேன் எனல் பொருந்துவதோ எனவும் சொல்லலாம்.

*To speak in an assembly (of the learned) without fullness of knowledge, is like playing at chess (on a board) without squares.* - 401

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவசித்தாந்த கலாநிதி செந்திநாதையர்

பண்டிதமணி
சி. கணபதிப்பிள்ளை

வியாச பகவான் அருளிய பிரம்மசூத்திர பாஷ்யங்களுக்குள்ளே மிகப் பிரசித்தி பெற்று விளங்குவது சங்கர பாஷ்யம். இது மூலநூலாகிய பிரம சூத்திரத்தையே விழுங்கி விட்டது.

"வியாச பகவான் சங்கர பகவத்பாதர் வாயிலாகத் தான் தமது சூத்திரங்களின் உண்மைப் பொருள்களைச் செவ்வனே அறிந்தார்" என்று ஒரு கதை கட்டி நூதனமாய் அதைப் பரப்புதற்கு [illegible] ஆயிரக்கணக்கானவர்கள் முன் வருவார்கள்.

அவ்வளவு தூரம் சங்கர பாஷ்யத்துக்கு ஆதிக்கம்; பாஷ்யமோ ஏகாத்மவாதமானது.

பிராமணர்களுள்ளே ஸ்மார்த்தப் பிராமணர்கள் பெரும்பான்மையினர். இவர்களுடைய விசேஷம் வேதத்தோடு சந்த பூஜைகளில் விசேடத்திலும் மிகுதியாம். இவர்களுக்கு ஈடாவது என்று ஒன்றில்லை. செல்வம், அதிகாரம் உத்தியோகம் என்ற யாவும் படைத்தவர்கள் ஸ்மார்த்தர்கள். அரசாங்கமே அவர்களின் கைப்பம்பரம் என்று சொல்லி விடலாம். இப்படிப்பட்ட ஸ்மார்த்தப் பிராமணர்கள் சங்கர பாஷ்யத்தை அக்ஷரம் அக்ஷரமாய் ஒப்புக்கொள்ளுபவர்களாயே இருப்பார்கள்; வியாசரிலும் பார்க்கச் சங்கரரையே மதிக்கிறவர்கள். சங்கரர் கொண்ட வேதநிலைப் பகுதிகளைக் கொள்ளுவதல்லாமல் ஏனைய வேதப் பகுதிகளையே மனமாரக் கொள்ளாரே இவர்கள் கொள்ளுவதில்லை. தேவார திருவாசகங்களுக்கோ அறியும் மதிப்புக்கொடார்கள்.

பிராமணர்களுள்ளே ஆதிசைவர் ஒருபகுதியார். அவர்களே முப்பொழுதுந் திருமேனி தீண்டுதற் குரியார்; கோயில்களில் பூசை செய்வதற்கு அருகதை உள்ளவர்கள். காலக்கிரமத்தில் இவர்கள் நிலை பரிதாபமாய்ப் போகவே ஸ்மார்த்தர்களின் நிலைமை வர வர அதிகாரத்தில் மேலோங்கி வருவது; படித்தவர்களும் அவர்களே. அதனாலே, ஆதிசைவர்களும் மெல்ல மெல்ல ஸ்மார்த்தர்களானார்கள்.

பெரியபுராணத்திலே சிறந்து பாராட்டப்பட்ட தில்லைவாழ் அந்தணர்களின் சந்ததியார் என்று சொல்லிக் கொண்டிருக்கின்ற இப்பொழுதைய தில்லை வாழ் அந்தணர்களிற் பெரும்பான்மையோர்களே ஸ்மார்த்தர்களாயி விட்டார்கள். சிவதீக்ஷை பஞ்சாட்சரஜெபம் ஆகிய இவற்றையெல்லாம் புறமாய் விட்டார்கள். பதஞ்சலி மகாமுனிவர் சிவாகமமுறைப்படி வகுத்த பத்ததியாகிய சிதம்பர நடன பூசைக் கிரமத்தையே மாற்றி அமைத்து விட்டார்கள்.

இந்த அக்கிரமத்தை,

*"வேதக் காட்சிக்கும் உபநிடதச்சியில் உதித்த போதக் காட்சிக்குங் காணலன்"*

*"சுத்தவாதுள முதலிய தந்திரத் தொகுதி உய்த்துணர்ந்திடு நீரே ஒரு சிறிதுணர்வார்"*

என்று முறையிடுகின்ற சிதம்பரபுராணத்தில் கூறிய ஆறுமுகநாவலர் கண்டார்; கொதித்தெழுந்தார்; சிதம்பரத்திலே தில்லைவாழந்தணரிடம் விபூதி வாங்க மறுத்தார். அதனால் விளைந்த சரித்திரம் ஒரு சமுத்திரம். அதில் ஒரு துளிதான் பெரியபுராண முகப்பில் உண்மை நாயன்மார் மகிமையில்

கல்லாதான் சொற்காமுறுதல் முலையிரண்டும்
இல்லாதாள் பெண்காமுற் றற்று. 402

கல்லாதவன் ஒரு அவையினில் சொற்பொழிவாற்ற விரும்புதல் முலையிரண்டும் முகிழ்க்காத பருவம் வராதவள் பெண்மை இன்பத்தை விரும்பினாற் போன்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவது அத்துணி வருமாறு:

"இக்காலத்து ஸ்மார்த்தப் பிராமணருள்ளே பலர் அறுபத்து மூன்று நாயன்மாரை வழிபடக் கூசுகின்றார்கள்; அவர்களுடைய உற்சவங்களிலே வேதபாராயணஞ் செய்ய மறுக்கின்றார்கள்; அவர்களுடைய அருமை பெருமைகளைச் சிறிதும் சிந்தியாது அவர்களை வேண்டியவாறே நிந்திக்கின்றார்கள். ஐயையோ! இது எவ்வளவு அதிபாதகம்! அநபாய சோழமகாராஜா பெரிய புராணஞ் செய்தருளிய சேக்கிழார் நாயனாரை யானை மீதேற்றித் தாமே வெண்சாமரம் வீசி நகர்வலஞ் செய்வித்தபொழுது, தில்லை வாழந் தணர்கள் வேதபாராயணஞ் செய்துகொண்டு வந்தார்கள் என்று உமாபதிசிவாசாரியர் சேக்கிழார் புராணத்தில் கூறியிருக்கின்றாரே. அங்ஙனமாகவும், அப்பெரியபுராணத்திற் கூறப்பட்ட அறுபத்து மூன்று நாயன்மார்களுடைய உற்சவங்களிலே வேத பாராயணஞ் செய்யலாகாதென்று சிறிதும் பழி பாவங்களுக்கு அஞ்சாது பிதற்றுதல் எவ்வளவோ அறியாமை!

"மாங்கல்யத்தைத் தரித்துக்கொண்டு தங்கள் தங்கள் நாயகருக்குத் துரோகஞ்செய்து இல் லிருக்கின்ற பெண்கள்போல விபூதிருத்திராட் சங்களைத் தரித்துக்கொண்டு அவ்விபூதிருத்திராட்சங்களுக்கு உரிய சிவபெருமானோடு பசுக்களைச் சமமெனக் கூறியும், சிவவாக்கியமாகிய சிவாகமங்களை நிந்தித்தும், அச்சிவபெருமானுக்குத் துரோகிகளாய் ஒழுகும் இவர்கள் மற்றை எப்பாதகந்தான் செய்யக் கூசுவார்கள்! ஐயையோ! இச்சிவத்துரோகிகளை நம்முடைய சைவசமயிகள் வணங்குதலும், இவர் களிடத்தே புசித்தலும், இவர்களை விவாகம் சிராத்தம் முதலிய கருமங்களிலே தமது பாத்திர மாகக் கொண்டு தாம் வருந்தித் தேடிய பொருள் களைப் பாழுக்கிறைத்து எரிவாய் நரகத்துக்கு இரையாகுதலும் எவ்வளவு அறியாமை!

"ஓ! சைவசமயிகளே சைவசமயிகளே! உங்கள் எதிரே அறுபத்துமூன்று நாயன்மார்களை நிந்திக்கும் ஸ்மார்த்தர்களைக் காணுந்தோறும் இந்த ஐந்து வினாக்களையுங் கேட்டு அவர்களைத் தலைகுனிவித்து அவர்கள் வாயை அடக்குங்கள். அவ்வினாக்கள் இவை:

(1) "ஓ ஸ்மார்த்தர்களே, உங்கள் மததாபகராகிய ஆசாரியர் சங்கராசாரியரோ அன்றோ?

(2) சௌந்தரிய லகரியும் சிவானந்த லகரியும் சிவபுஜங்கமும் உங்கள் சங்கராசாரியர் செய்த கிரந்தங்களோ அன்றோ?

(3) அறுபத்துமூன்று நாயன்மார்களுள்ளே திரு ஞானசம்பந்தமூர்த்தி நாயனாரைச் சௌந் தரிய லகரியிலும், கண்ணப்ப நாயனாரைச் சிவானந்தலகரியிலும், இயற்பகை நாயனாரை யும் சிறுத்தொண்ட நாயனாரையும் சிவபுஜங் கத்திலும் உங்கள் சங்கராசாரியர் துதித்திருக் கின்றாரோ அன்றோ?

(4) உங்கள் குருவாகிய சங்கராசாரியராலே துதிக் கப்பட்ட நாயன்மார்களை நீங்கள் நிந்தித்தலி னாலே அச்சங்கராசாரியரிடத்திலே அறியா மையை ஏற்றும் குருநிந்தகர்கள் ஆனீர்களோ அன்றோ?

(5) அறுபத்துமூன்று நாயன்மார்களை வணங்கும் பிராமணர்கள் பதிதர்களாவரெனச் சொல்லும் நீங்கள் அவர்களைத் துதிக்கும் சங்கராசாரி யரைப் பதிதர் எனச் சொல்லாது சொல்லி யபடியால் நீங்கள் வளைவருகலாற் பதிதர்ப் பதிதர்களாயினீர்களோ அன்றோ?

"அகத்தியன் சனகன் முன்னோர்
அத்திரி வசிட்டன் என்பான்
சகத்துயர் பிருகு மேலாந்
ததீசி வெந்சாபத் தீயால்
பகைத்திடு புலத்தை வென்ற
பராசரன் இனைய பலர்
மகத்தினை யிகழா வின்று
வருகிலர் போலும் என்றார்."

*The desire of the unlearned to speak in an assembly is like a woman without breasts longing (for) the enjoyment of womanhood.*
-Kural

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருமேயத்தும பிராமண இருடிகளான அகத்தியர் முதலியவர்கள் தக்கனுடைய யாகத் துக்குப் போக மறுத்துவிட்டார்கள். தக்கனுடைய யாகம் சிறப்புடையதாவதை நிறுத்துகின்ற வரிசை தவறிய பாவம் அதனாலே அந்த முனிபுங்கவர்கள் அங்கே போகக் கூசி விட்டார்கள். ததீசி முனிவர் மாத்திரம் வைசிகேளமல் அங்கே போய், அந்தத் தக்கனுக்கு எத்தனையோ புத்திமதிகள் கூறினார். அவன் கேட்கவில்லை. அவருக்குக் கோபம் வந்துவிட்டது. அவனைச் சபிக்கின்றார். சபித்த பிறகு,

"அங்கதனுறு மறையவர் தம்முகநோக்கி
அந்தணரிப் அறிதா ஆனீர்
உங்கள் குலத்தலைமைதனை இழந்திட்டீர்
கேண்மினென உரைக்கலுற்றான்"

(அறிதா - பேடி)

"பேசரிய மறைகளெல்லாம் பராபரனே
எனவணங்கிப் பெரிது போற்றும்
ஈசனையும் அன்பரையும் நீற்றொடுகண்
டிகையினையும் இகழ்ந்து நீவிர்
காசினியில் மறையவராய் எந்நாளும்
பிறந்து இறந்து கதியுறாது
பாசதம னிடைப் பட்டு மறை உரையா
நெறி யதனிற் படுநீர் என்றான்."

"மறையோர்களே, நீங்கள் தக்கன் யாகத்தில் வந்து ஈஸ்வரனிகளாகமல், மறைநெறி திரும்பிப் புறமாகப் பிறந்து இறந்து உழலக்கடவீர்கள்" என்று ததீசி முனிவர் சபிக்கின்றார்.

முனிவர்களின் சாபத்தினாலோ வேறு எந்தக் கர்மத்தினாலோ அறியோம், இந்தப்பூமியிலே "மிண்டிய மாயாவாதமென்னும் சண்டமாருதத்துள்" அகப்பட்டு ஏகாத்மவாத வலையுள் சிக்குண்ணாத பிராமணர்கள் விரல் மடித்து எண்ணத்தக்க ஒரு சிலரே.

ஒரு மச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள்,

"சுத்த வாதுள முதலிய தந்திரத் தொகுதி
உயத்துணர்ந்திடு நீரே ஒருசிறி துணர்வார்"

என்று அருளினார்.

ஒரு அருணந்தி சிவாசாரியர்,

"நானே பிரமம் என்றுரைத்து
ஞாலம் பொய்த்தேர் என எண்ணி
ஊனே புகுந்து நின்றுயிர்கட்
குபதே சங்கள் உரைத்து வரும்
மானா மதியே டனுமாய
மாயா வாதி யேயாகித்
தானே உரைக்கும் அந்நூலின்
உண்மை தன்னைச் சாற்றுவாம்"

என்று அருளிச் செய்தார்.

ஒரு உமாபதி சிவாசாரியர்,

"நான் பிரமம் என்பவர் பால்
நண்ணாதே"

என்று அருளிச்செய்தார். இந்தக் காலத்திலே இந்த மகான்களின் கூற்றுக்களைச் சிந்திக்கும் தெளிகின்றவர் எத்தனை பேர்!

நான் பிரமம் என்பார் பால்
நண்ணாதவர் யார்?

இந்த யாழ்ப்பாணத்திலே ஒரு செந்திநாதையர் சிந்திக்கத் தொடங்கினார். "ஏத்திடு சுருதிகள்" என்ற பாடலிலே மச்சியப்ப சிவாசாரிய சுவாமிகளாலே பாராட்டப்பட்ட வியாச பகவானுக்கும் சங்கரருக்கும் தொடர்புண்டா? என்ற ஆராய்ச்சி தொடங்கியது. பிரமசூத்திரத்துக்கும் சங்கர பாஷ்யத்துக்கும் தொடர்பு இல்லை என்ற முடிவுக்கு அவர் வந்தார். தம் உடல் பொருள் ஆவி மூன்றையும் இந்த ஆராய்ச்சிக்கே அர்ப்பணம் செய்தார் என்பதில் எள்ளளவேனும் சந்தேகம் இல்லை.

செந்திநாதையர் காசி வாசியாய் அங்கே சர்வகலாசாலைப் பண்டிதர்களின் மத்தியிலிருந்து

[illegible]

பிரமசூத்திரத்துக்குச் சங்கரரும் பிறரும் வகுத்த பாஷ்யங்களை எழுதித் தெளிவுபடுத்தினார். நீலகண்ட சிவாசாரியார் பிரமசூத்திரத்துக்குச் செய்த பாஷ்யத்தைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார். அன்றி சங்கரர் பத்து உபநிஷதங்களுக்குச் செய்த வியாக்கியானங்களையும் படித்தார். படித்து பிறகு அட்டவணை செய்த ஆராய்ச்சிகளின் பெறுபேறுகளே,

1) நீலகண்ட பாஷ்யத் தமிழ் மொழிபெயர்ப்பு.
2) சிவஞானபோத மகாலங்கார தீபம்
3) சைவ வேதாந்தம்
4) தேவாரம் வேதசாரம்
5) வைதிக சுத்தாத்துவித சைவ சித்தாந்த தத்துவப்படம், அதுபற்றிய வினாவிடை, என்னும் நூல்கள்.

இவற்றுள், நீலகண்ட பாஷ்ய மூலமாகிய, இரு நீண்ட உபக்கிரமணிகைகள் அடங்கியிருக்கின்றன. ஒன்று உபநிஷத உபக்கிரமணிகை; மற்றது பிரமசூத்திர உபக்கிரமணிகை. இவை இரண்டும் சைவசித்தாந்த கலாசாரமாகிய சரபத்தின் இரு சிறகுகள் என்றே வருணிக்கத் தக்கவைகள். ஒவ்வொன்றும் தனித்தனி கோடி பொன் பெறும்.

வேதங்கள் ஆகமங்கள் புராணங்கள் இதிகாசங்கள் ஸ்மிருதிகள் திருமுறைகள் சாத்திரங்கள் எல்லாம் ஆராய்ந்து ஆக்கப்பட்டவைகள் அந்த உபக்கிரமணிகைகள். ஆயிரக்கணக்கான வருஷமாக ஏகாதிபத்திகள் சைவ சித்தாந்த கலாசாரத்தை விஷமம் செய்து அடாத செயல்களை அந்த உபக்கிரமணிகைகள் கையும் மெய்யுமாக எடுத்துக் காட்டுகின்றன. இந்த உபக்கிரமணிகைகளும், ஐயர் அவர்களின் தத்துவப் படமும் அதன் விளக்கமும் பாரம்பரைக் கலாசாரத்தின் கலங்கரை விளக்கங்கள் என்றே சொல்ல வேண்டும். இவற்றுள், தத்துவப் பட விளக்கத்தில் வரும் ஒரு அடிக்குறிப்பும், சைவ சித்தாந்தத்தில் ஒரு குறிப்பும், சைவ வேதாந்தத்தில் ஒரு குறிப்பும், ஐயர் அவர்கள் இயற்றிய கந்தபுராண நவநீதத்தில் வரும் ஒரு குறிப்பும் மிகமிக இன்றியமையாதவைகள். ஐயர் அவர்கள் நமது கலாசாரத்துக்குச் செய்த அரும் பெரும் முயற்சியைக் காட்டுபவைகள்.

நன்றி
*கந்தபுராண கலாசாரம்*

---

## விவேக சிந்தாமணியிலிருந்து......

*கற்பழிந்தால் மங்கையருக் கழகு குன்றும்*
*கேள்வியில்லா வரசனா லுலகம் பாழாம்*
*துற்புத்தி மந்திரியா லரசுக் கீனம்*
*சொற்கேளாப் பிள்ளைகளாற் குலத்துக்கீனம்*
*நற்புத்தி கற்பித்தா லற்பர் கேளார்*
*நன்மைசெய்யத் தீமையுடனே புரிந்து செய்வார்*
*அற்பரோ டிணங்கிற் பெருமை தாழும்*
*அறிவுதவம் கோபத்தாலழிந்து போமே.* 16

மங்கையர்க்கு கற்பழிந்தால் அழகு குறையும். கேள்வி ஞானமில்லாத அரசனால் உலகு பாழாகும். (ஸ்ரீ விசாரித்து நீதி வழங்காத அரசன் எனவும் பொருள் கொள்க) அரசாங்கத்துக்குத் துர்புத்தியுள்ள மந்திரிகளால் கெடுதியுண்டாகும். அறிவில்லார்க்கு நல்ல புத்திகளைச் சொன்னாலும் கேளார். நன்மை செய்பவர்க்கு உடனே தீமையையே பாராட்டிச் செய்வர். இவ்வித அற்பரோடு கூடினவர் மகிமை குறையும். கோபத்தினால் அருமையாகிய தவம் அழிந்து போகும்.

*தன்னுடன் பிறவாத்தம்பி தனைப் பெறாத் தாயார்தந்தை*
*அன்னியரிடத்துச் செல்வ மரும்பொருள் வேசியாசை*
*மன்னியவேட்டில் கல்வி மருமனை யாட்டி வாழ்க்கை*
*இன்னவை யாறுமாறு மிடுக்கத்துக் குதவமாட்டா.* 17

உடன் பிறவாத சகோதரன், தன்னைப் பெறாத தாய், தந்தையர், பிறரிடம் உள்ள செல்வம், பொருளில்லை கொண்ட வேசியராசை, ஏட்டிலெழுதியிருக்கும் கல்வி, அயலான் மனைவியோடு கூடிய வாழ்க்கை இந்த ஆறு வகைகளும் தக்க சமயத்துக்கு உதவ மாட்டா.


*The unlearned also are very excellent men, if they know how to keep silence before the learned.* 403

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரபத்திரக்கடவுள் சரப வடிவங் கொண்டது

சிவஸ்ரீ. ச. குமாரசாமிக் குருக்கள்

முன்னொரு காலத்திலே இரணியன் என்னும் ஓர் அசுரன் பிரமாவை நோக்கிப் பெருந் தவஞ் செய்தான். பிரமதேவன் தோன்றி, "இரணியனே! நீ விரும்பிய வரங்கள் யாவை? கூறுதி" என்று வினவியருளினார். இரணியன், பஞ்ச பூதங்கள், மிருகங்கள், பட்சிகள் முதலியவற்றினால் இரவிலும் பகலிலும் இறவாதிருக்க வேண்டும். இறப்பினும் எனது உடலினின்று ஒழுகிய உதிரத்தில் ஒரு துளி நிலத்தில் வீழ்ந்தாலும் உடனே அவ்வுதிரத்துளி என் வடிவு பெற்று என் பகைவர்களை அழிக்க வேண்டும்" என்று வேண்டினான். பிரமதேவர் "அங்ஙனமே ஆகுக" என்று கூறி மறைந்தருளினார். அவன் தருக்குற்று, தேவர் முதலிய யாவரை வருத்திக் கொடுங்கோல் செலுத்தி வந்தான். அவனாஞ்ஞை யால் அனைவரும் "இரணி யாய நம" என்றே முதற் கூறித் தங்கள் கருமங்களைத் தொடங்குவார்கள். அங்ஙனம் நிகழும் காலத்தில் அவனுக்குப் பிரகலாதன் என்னும் பெயருள்ள ஒரு புத்திரன் பிறந்தான். அவனுக்கு ஐந்து வயசான பின்னர் இரணியன் சுக்கிராசாரியருடைய புத்திரர் இருவரிடத்தில் வித்தை கற்கும்படி அனுப்பினான். அவர்கள் அப்புதல்வனுக்கு ஆரம்பத்தில் "இரணியாய நம" என்று சொல்லிக் கொடுத்தார்கள். புதல்வன் "நமோ நாராயணாய" என்று கூறினான். சுக்கிரன் புத்திரர்கள் கோபமுடையவராய், இரணியனிடம் போய்ப் பிரகலாதனுடைய செய்கையைக் கூறினார்கள். இரணியன் தன் மகனை அழைத்து, "உனக்குக் கூறிய முதல் வாக்கியத்தைக் கவனியாது, வேறு யாது சொற்றனை" என்று கோபத்துடன் வினவினான். பிரகலாதன் "நமோ நாராயணாய" என்றான். கொடியோன் கடுஞ் சீற்றங்கொண்டு மகனை வெட்டு



வித்தான். அவனுடைய சரீரம் ஊறுபடவில்லை. இரணியன் விடமூட்டுவித்தான். அது அவனுக்கு அமிர்தமாயது. பாம்புகளைக் கடிக்கும்படி ஏவினான். பாம்புகளின் பற்கள் முறிந்தன. யானைகளைக் குத்தும்படி செய்தான். அவையவற்றின் தந்தங்கள் ஒடிந்தன. இன்னும் இவை போலும் பல துன்பங்களைச் செய்வித்தும் அவன் இறக்கவில்லை.

மகன் இறவாத தன்மையைக் கேள்வியுற்று, சபை முன்னர் வருவித்து "என் மகனே! நீ கூறிய வேறு கடவுளுண்டா? நீ சொல்லிய அக் கடவுளை என் கண்முன்னே காட்டுவாயாக; காட்டாதொழிவையேல் உன்னைக் கொன்று விடுவேன்" என்று கூறினான். அது கேட்ட பிரகலாதன் "திருமால் எங்கு முள்ளவர்" என்றான். இரணியன் "இத்தூணில் அவனைக் காட்டக் கடவாய்" என்றான். அப்பொழுது திருமால் அவன் சுட்டிய தூணிலிருந்து நரசிங்கமாய்த் தோன்றி மாலைப் பொழுதில் இரணியனைத் தள்ளி மடியிற்கிடத்தி, மார்பைப் பிளந்து அவனது உதிரத்தையும் உயிரையும் பருகினார்.

வீட்டுணுவாகிய நரசிங்கம் "இரணியனை யான் கொன்றேன்" என்று அகங்கரித்துச் சீவராசிகளை வருத்தியது. பிரமா முதலிய தேவர்கள் சிவபெருமானை வணங்கி, அடியேங்களது அச்சத்தை நீக்கியருளுக" என்று விண்ணப்பித்தனர். வீரபத்திரக்கடவுள், சிவபெருமானது திருவுள்ளக் கருத்தின்படி எட்டுக்கால்கள் பொருந்திய சரப உருவமேற்று, நரசிங்கத்தைக் கொன்றனர்.

302, 303, 304

கொன்ற பின்னர் அவன் தோலை உரித் தெடுத்து அச்சாப உருவை நீக்கி அத்தோலைச் சிவன் சந்நிதியில் வைத்து வணங்கினர்.

பிரமா முதலிய தேவர்கள் பணிந்து "சுவாமி இத்தோலை ஆடையாக அணிந்தருள வேண்டும்" என்று பிரார்த்தித்தார்கள். சிவபெருமான் அவ் விதமே சாத்தியருளினார். விட்டுணும் முயங்காவ தாரம் கொண்டு செய்த பாவங்களைத் தீர்க்க விரும்பிச் சிவபெருமானுடைய பாதங்களை அர்ச் சித்துத் தமது பதவியை அடைந்தார்.

## திருநாவுக்கரசு நாயனார்


திருத்தாண்டகம்

துங்கநகத் தாலன்றித் தொலையா வென்றித்
தொகுதிறலவ் விரணியனை யாகங் கீண்ட
அங்கனகத் திருமாலு மயனுந் தேடு
மாருமலை யநங்கடனுல் பொடியாய் வீழ்ந்து
மங்கநகத் தான்வல்ல மருந்து தன்னை
வண்டமிலை மாமலையின் முன்னி நின்ற
செங்கனகத் திரடோளெஞ் செல்வன் றன்னைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டே னானே.

## பதினெண் சித்தர்கள்

### (15) ஸ்ரீ சீர்காழி சட்டநாதர் (திருவரங்கம்)

Dr. எஸ். லோகநாதன் (B.S.M.S.(India) J.P)
மரகதம் கிளினிக், நானாட்டான், மன்னார்.



வட இலங்கையின் யாழ்ப்பாணத்தில் கண் அமைந்த நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்டவராகக் கருதப்படுகிறார். இவரை சட்டநாதர், சட்ட முனி எனவும் அழைப்பர். இவர் பெருமையைக் கூறும் ஒரு கர்ண பரம் பரைக் கதை உண்டு. பல தலங்களைப் பாத யாத்திரை மூலம் தரிசித்து வந்த இவர் இந்தியா வில் உள்ள தமிழ்நாட்டில் பாதயாத்திரை மேற் கொண்டபோது திருச்சியில் உள்ள ஸ்ரீரங்கத்தில் அமைந்துள்ள திருவரங்கனைத் தரிசிக்க விரும்பி அக்கோயிலுக்குச் சென்றிருந்தார். அப்போது நள்ளிரவைத் தாண்டி விட்டதால் அர்த்தஜாமப் பூசையும் முடிந்து தலைமைப்பட்டர் கோவிலை மூடிவிட்டுச் சென்று விட்டார். இதை அறிந்த சட்டைநாதர் "அரங்கநாதா" என மும்முறை விளித்தார். கதவு தானே திறந்து மணியோசை, மேளதாள ஒலி, வேதபாராயண ஒலி, கீதநிருத்திய ஒலி, அளவற்ற மக்களின் கூட்டத்தால் ஏற்பட்ட இரைச்சல் இவைகளைக் கேட்ட மக்கள் அனை வரும் திரண்டு கோவிலுக்கு விரைந்தனர். ஆனால் அங்கு அரங்கநாதர் பூண்டிருந்த ஆபரணங்கள் யாவையும் சட்டமுனி பூண்டிருக்கக் கண்டனர். இறைவனின் ஆபரணங்கள் யாவற்றையும் இவரிடம் இருக்கக் கண்ட மக்கள் அனைவரும் அரசனிடம் முறையிட, அரசாணைக் கிணங்க ஆபரணங்கள் அனைத்தும் களைந்து புனஸ்காரங்கள் செய்து மீண்டும் அரங்கநாதருக்குப் பூட்டினார்கள். ஸ்ரீரங்கம் ஆலயத்தில் இரவில் நடந்தவற்றைக் கூறும் வண்ணம் மன்னர் சட்டைமுனிவரைக் கேட்டபோது, தனக்கு ஒன்றும் தெரியாது என்றும், எல்லாம் திருவரங்கனின் செயல் என்றும் கூறிவிட்டார். இவரது கூற்றை பொய்ப்பிக்க எண்ணிய அரசன் ஆணை பிறப்பித்து சட்டை நாதரையும் அழைத்து தன் பரிவாரங்களுடன் ஆலயத்திற்குச் சென்றார். சட்டைநாதர் ஸ்ரீரங்கர் ஆலயத்தின் வாசலில் முன்நின்று "அரங்கநாதா" என மும்முறை அழைத் தார். என்னே அதிசயம்! கதவு தானாகவே திறந் தது. முன்னையநாள் இரவில் எழுந்த அத்தனை ஒலிகளும் காது செவிடுபடக் கேட்டன. அத்துடன் திருவரங்க நாதரின் உடலில் உள்ள அத்தனை ஆபரணங்களும் ஒன்றன்பின் ஒன்றாக சட்டை நாதரின் உடலை அலங்கரிக்கத் தொடங்கின. மனித உருக்கொண்டு வந்த சட்டை நாதரே அரங்கநாதர் என மன்னரிலிருந்து பாமக்கள் யாவரும் கண்டு சாஷ்டாங்கமாக அவரது பாதக் கமலத்தில் வீழ்ந்து வணங்கி மன்னிப்புக் கேட்ட துடன் நமஸ்காரமும் செய்தனர். இவர் திருவரங் கனின் சந்நிதானத்திலேயே சமாதியில் ஆழ்ந்து இன்றும் மக்களுக்கு அருள்சுரந்து வருகின்றார். சட்டமுனி நிகண்டு, சட்டமுனி 20, சட்ட முனி சிவயோகத்திரவம், சட்டமுனித் தாண்டகம், சட்ட முனி சூலசூத்திரம், சட்டமுனி வாக்கியம் என்பன இவர் இயற்றிய அரும்பெரும் நூல்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுவது சினம்

க. யோகேஸ்வரி

உருத்திரமூர்த்தி பெயருக்கேற்ற வகையில் கோபக்காரன். எதற்கெடுத்தாலும் கோபிக்கும் அவர் முன் மனைவியோ, மக்களோ கதைப் பதற்கே பயப்படுவார்கள்.

காலையில் எழுந்து தன் அலுவலகத்திற்குப் போவதற்கிடையில் யார் மீது கோபிப்பார் என்று விவஸ்தையே இல்லாமல் சீறிப் பாய்வார். அது அவருடன் கூடப் பிறந்த குணம்.

அலுவலகத்திற்குக் கிளம்பியவுடன் "இன்று சாந்தாவின் பாடசாலைப் பரிசளிப்புவிழா அவளுக்குப் பல பரிசுகள் இருக்கின்றனவாம். சீக்கிரமாக வீட்டுக்கு வாங்கோ" பயபக்தியுடன் மனைவி கமலம் சொன்னாள்.

ஏற்கனவே பரிசளிப்பு பற்றி ஞாபகமூட்டியிருந்தாலும் கணவர் மறந்து இருப்பார், என்று மீண்டும் ஒருமுறை ஞாபகப்படுத்தினாள்.

"சீ.......... என்ன கமலம்? இவ்வளவு பிந்திச் சொன்னால் நான் எப்படி வர முடியும்? நீ இரண்டு நாட்களுக்கு முன்பே சொல்லியிருக்கலாமே? எனக்கு இன்று மாலை அலுவலகத்தில் ஒரு முக்கியமான கூட்டம் இருக்கிறது" எரிந்து விழுந்தார் உருத்திரமூர்த்தி.

நான் உங்களுக்குப் போன கிழமையே சொன்னேனே நீங்கள் மறந்திட்டீர்கள். கண்களில் பொங்கிய கண்ணீரை அடக்கிக் கொண்டு கமலம் மறைக்க முற்பட்டாள்.

"அப்பா புரோகிரஸ் ரிப்போட்டில் கையெழுத்து போடுங்கோ" ரிப்போட்டைக் கையில் எடுத்துக் கொண்டு சின்ன மகன் சுதன் ஓடி வந்தான்.

"போடா போ, இருக்கு மட்டும் இருந்திட்டு இப்பதான் உனக்கு நேரம் கிடைச்சுதா" ரிப் போட்டைப் பார்க்காமல் மகன் மீது எரிந்து விழுந்தபடியே வெளியேறிச் சென்றார்.

வாசலில் அப்பாவின் சத்தம் கேட்டு எட்டிப் பார்த்த சுதனுக்கு அப்பா கார்ச்சாரதியைத் திட்டுவது கேட்டது.

ஒன்றும் பேசாது பணிவாக நின்றான் சாரதி சங்கர். அவன் மீது தப்பு இருக்காது, கணவர் வீணே அவனைத் திட்டுகிறார் என்பது கமலத்திற்கு விளங்கியது.

முன்கோபியான உருத்திரமூர்த்தியைக் கோபத்தை அடக்கும்படி கமலம் எத்தனையோ தரம் சொல்லிவிட்டாள். கணவன் கொண்ட கோலத்தை மாற்றுவதாகத் தெரியவில்லை. தனது தலைவிதியை நொந்தபடியே கமலம் வாழ்ந்து கொண்டிருந்தாள்.

வீட்டு வேலைகளில் மூழ்கியிருந்த கமலம் டெலிபோன் மணிச்சத்தம்கேட்டு ரிசீவரைத் தூக்கினாள்.

"அம்மா அப்பாவுக்கு உடம்பு சுகமில்லை. குடும்ப டாக்டர் வீட்டிற்குப்போயிருக்கிறார், உடனே வாங்கோ" அலுவலகத்திலிருந்து போன் வந்தது. கைவேலையைப் போட்டுவிட்டு அரக்கப் பரக்க டாக்டர் வீட்டுக்குச் சென்றாள் கமலம்.

உருத்திரமூர்த்தி டாக்டர் வீட்டுக் கட்டிலில் படுத்திருந்தார். பக்கத்தில் அலுவலக ஊழியர் ஒருவர் சோகமாக உட்கார்ந்திருந்தார்.

"என்ன ஆயிற்று? வீட்டில் இருந்து கிளம்பும் போது நல்லாகத்தானே இருந்தார்!" டாக்டர் முகத்தைப் பார்த்துக் கமலம் கவலையுடன் கேட்டாள். பல்வருடங்களாகக் குடும்ப வைத்திய ரான சிவபாலனுக்கு உருத்திரமூர்த்தியைப்பற்றி யும் அவருடைய முன்கோபம் பற்றியும் நன்கு தெரியும். கமலம் அறிந்தவரான டாக்டர். "அம்மா உங்கள் கணவருடைய பிரஷர் சடுதியாகக் கூடி ஏறிவிட்டது. அதனால் தலைச்சுற்றும், மயக்கமும் வந்து விட்டது."

"இப்ப எப்படி இருக்கிறார் டாக்டர்" கரிசனை யோடு கமலம் கேட்டாள். "இப்போது மருந்து தூக்க மாத்திரையும் கொடுத்து இருக்கிறேன். அவருக்குப் பயப்பிடும்படியாக ஒன்றும் இல்லை,

மிகுதி 35 பக்கத்தில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைக்கால் அம்மையாரின் பக்தி வைராக்கியம்

திருமதி. க. யோகேஸ்வரி

தேவாரம் பாடிய மூவருக்குக் காலத்தால் முற்பட்டவர் காரைக்கால் அம்மையார். இவர் அருளிச் செய்த பிரபந்தங்கள் அற்புதத்திருவந்தாதி, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், திருவிரட்டை மணிமாலை என்பனவாகும். இவை பதினோராந் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளன.

பரமதத்தன் என்ற வணிகனுக்கு வாழ்க்கைப்பட்ட புனிதவதியார் வாழ்வில், மாங்கனி ஒன்று விளையாடியது. மனைவியைச் சோதிக்க எண்ணிய கணவனுக்கு இறைவனை வேண்டி மாங்கனியை வரவழைத்துக்கொடுத்தார் அம்மையார். மனைவியின் தெய்வீகத் தன்மையை உணர்ந்த பரமதத்தன் அம்மையாரோடு வாழும் அருகதை தனக்கு இல்லை என்பதை உணர்ந்து பிரிந்து சென்றார். வேறொருத்தியை மணந்தார். தனக்குப் பிறந்த குழந்தைக்குப் புனிதவதி என்று அம்மையாரின் பெயரைச் சூட்டி மகிழ்ந்தான்.

அம்மையாரின் சுற்றத்தார் கணவரிடத்து இவரைக் கூட்டிச்சென்றனர். பரமதத்தரோ, அம்மையாரை வணங்கி கடவுள் தன்மை பொருந்திய அவரோடு வாழ்தல் அரிது என்று கூறினார். அது வரை கணவருக்காகத் தாங்கி நின்ற உடலை நீக்கிவிட்டுப் பேயுருவைத் தருமாறு சிவனை வேண்டினார். பேயுரு பெற்றுச் சிவகணங்களுள் ஒன்றானார்.

இவர் பாடிய "அற்புதத்திருவந்தாதி" நூற்றியொரு வெண்பாக்களைக் கொண்டது. அந்தாதி என்பது முதற் செய்யுளின் ஈற்றுச்சொல் அடுத்த செய்யுளின் ஆதியாக வருவது. ஒருமாலை போலத் தொடர்ந்துவரும். இச்செய்யுள்களிலே முதற் செய்யுளின் முதற்சொல் இறுதிச் செய்யுளின் ஈற்றுச் சொல்லாய் வரும். இவ்வந்தாதியிலே அம்மையார் இறைவன் மீதுகொண்ட பக்தி வைராக்கியம், சிவசிந்தனை, ஆராத அன்பு, அன்பு காரணமாகப் பிறந்த உரிமை என்பன தெளிவாகப் புலப்படுகின்றன.

இளமைக்காலம் முதல் சிவசிந்தனையுடன் வாழ்ந்தவர் அம்மையார். இறைவனை வேண்டிப் பேயுரு பெறுவதற்கு முன்னமே இறைவனுடைய நினைவில் திளைத்தவர். தான் சிவன் மீது கொண்ட ஆராத அன்பினையும், உரிமையையும் பக்தி உணர்வினையும்,

*அன்றும் திருவுருவம் காணாதே ஆட்பட்டேன்*
*இன்றுந் திருவுருவங் காண்கிலேன் - என்றுந்தான்*
*எவ்வுருவோன் நும்பிரான் என்பார்கட் கென்னுரைக்கேன்*
*எவ்வுருவோ நின்னுருவம் ஏது?*

என உரிமையுடன் இறைவனிடம் வினவுகின்றார். உன்னுருவம் எப்படி இருக்கும் என்று கேட்போர்க்கு நான் என்ன உரைப்பேன். கேட்கும் அளவிற்கு இறைவனிடம் உரிமை பூண்டிருந்தார் அம்மையார்.

*Although the natural knowledge of [illegible] may be very good, the [illegible] will not [illegible].*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் பிறந்து மொழி பயின்று பேசத்தொடங்கிய நாள் முதலாக உன்மீது அன்பை வைத்திருக்கின்றேன். எனது அன்பு நாளாக, நாளாகக் கூடிக் கொண்டே வருகின்றது. தேவர்களின் துயரினைத் தீர்ப்பதற்காக ஆலகாலத்தை உண்டு கறைமிடறாக விளங்குகின்ற இறைவா எனது இடரை எப்போது களையப்போகின்றாய்? என்று பரிவோடு பேசுகின்றார் அம்மையார். எனது இடர் என்று அம்மையார் குறிப்பிடுவது இறைவனைக் காணாமையால் அவருக்கு ஏற்பட்ட கவலையேயாகும்.

*பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல்*
*சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன் - நிறந்திகழும்*
*மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே*
*எஞ்ஞான்று தீர்ப்பது இடர்.*

நான் உன்னையே நினைத்து வாழுகின்றேன். நீயோ பிறருடைய இடர்களைத் தீர்க்கின்றாய். உன்னை நினைத்து உன் நினைவிலே வாழும் என் துன்பத்தை எப்போது தீர்க்கப் போகின்றாய் என்று இறைவனைக் கேள்வி கேட்கின்றார். இவ்வாறு இறைவனையே வினவுவதற்கு அவருடைய பக்தி வைராக்கியமும் உரிமை கொண்டாடும் மனநிலையும் காரணமாக அமைந்தன.

விடமுண்ட கண்டனாம் சிவன் மீது அம்மையார் கொண்ட அன்பானது சுயலாபம் கருதி ஏற்பட்டதன்று. தான் கொண்ட அன்பால் தனக்கு நன்மை பெறுவதும் கிடைக்கவில்லை. எனினும் அந்த அன்பு அற்று விடாது என்கிறார் அம்மையார்.

*இடர் களையாரேனும் எமக்கு இரங்காரேனும்*
*படரும் நெறிபணியாரேனும் - சுடர் உருவில்*
*என்பறாக் கோலத்து எரியாடும் எம்மானார்க்கு*
*அன்பறாது என்நெஞ்சு அவர்க்கு.*

என் அன்பானது அறாது என்று திடமாகக் கூறுவதற்கு அவரது பக்தி வைராக்கியமும் காரணமாகும். அவருடைய பக்தி வைராக்கியம் அருள்பால் அன்புற்றிருந்தால் அண்டமுலகம் கிடைக்கும் என்றாலும் அதை நான் விரும்பமாட்டேன். அவருக்கு ஆளாயிருப்பதற்கே ஆசைப்படுகிறேன் என்று கூறும் அளவிற்குச் சென்று விடுகின்றது.

*"கண்டெந்தை என்றிறைஞ்சிக் கைப்பணியால் செய்யேனேல்*
*அண்டம் பெறினும் அது வேண்டேன்"*

என்று பாடுகின்றார். இவ் வைராக்கிய உணர்வினை, இறைவனை நினைத்து, அவன் பணி செய்து, அவன் நிழல் அடைவதையே நம் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்ட அம்மையாரின் பாடல்களைக் காண்கின்றோம்.

தேவாரம் பாடிய நாயன்மாருக்குக் காலத்தால் முந்திய அம்மையார், பாடல்கள், பலருக்கும் முன்னோடியாக விளங்கின. இவர் மன உறுதி, நம்பிக்கை, பக்தி வைராக்கியம் இனி நமக்குத் துன்பம் இல்லை என்ற நெஞ்சம் பல அடியவர்களிடமும் காணப்படுகின்றது. அம்மையார் பலருக்கு வழிகாட்டியாக விளங்கினார் என்றால் மிகையாகாது.

[illegible]

# உமாபதிசிவத்தின் தத்துவச் சிந்தனை

சித்தாந்தக்கிரீடம்
கலாநிதி க. கணேசலிங்கம்

மெய்கண்ட ஆசான் பரம்பரையில் இறுதியாக வந்தவர் உமாபதி சிவாசாரியார். இவர் சைவசித்தாந்த நூல்கள் பதினான்கில் எட்டு நூல்களை அருளிச் செய்தவர். இவற்றைவிட வேறு நூல்களும் இவரால் எழுதப்பட்டுள்ளன.

உமாபதி சிவாசாரியாரின் சிந்தனை புதுமை மிக்கது. இவர் நூல்களில், மரபு வழிவந்த கருத்துக்களைத் தருவதில் புதிய அணுகுமுறையை இவர் மேற்கொண்டமையை பல இடங்களில் காண முடிகிறது. அத்வைதம் என்னும் சைவ சித்தாந்த தத்துவத்தை தமிழகத்துத் தத்துவமாகவும் காட்டியுள்ளார்.

## பழையதும் புதியதும்

காலப்போக்கில் பழைய கருத்துக்கள் மங்கிப் போக, புதிய கருத்துக்கள் புகுவது இயல்பானது. "பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல கால வகையினானே" என்பது தொல்காப்பியத் தொடர். ஆயினும் பழையன சிறந்தன என்ற கருத்தும் எல்லோரிடமும் பரவலாக இருந்து வருகிறது.

பழம் பெரும் நூல்களைத் தந்த அறிஞர்கள் அனுபவமும் ஆழ்ந்த புலமையும் சிந்தனைத் தெளிவும் கொண்டவர்கள். அவர்களின் கருத்துக்கள் மறுக்க முடியாதவைகளாக நடுநிலை நின்று எழுதப்பட்டவை. தொல்காப்பியம், திருக்குறள் போன்ற நூல்கள் எத்தனை ஆண்டுகள் சென்றாலும் அழியாத, மறுக்கப்பட முடியாத கருத்துக்களைக் கொண்டவையாகத் திகழ்கின்றன. இத்தகைய பழம் நூல்களைப் போற்றும் மக்களின் மனதில் பழைய நூல்களும் பழமையான கருத்துக்களும் எப்பொழுதும் நல்லவைகளாகக் கொள்ளப்படுவது இயல்பானதே. இதனால் புதிதாக வரும் எண்ணங்கள், புதுமை மிக்கவையாக இருப்பினும், தவறானவை என்று கருதவும் இடமேற்படுகிறது.

இந்த நிலை மாறவேண்டும். சிறந்த புதிய கருத்துக்கள் மக்களால் ஏற்றுக் கொள்ளப்படும். இதற்கு வழிவகுப்பதாக அவரின் "சிவப்பிரகாசம்" நூலின் அவையடக்கப் பாடல் அமைந்துள்ளது.

*"தொல்லையாம் எனுமெவையும் நன்றாகா இன்று*
*தோன்றியநூல் எனுமெவையும் தீதாகா"*

தத்துவத்துறையில் இக்கருத்தை முதன் முதலில் கூறிப் புரட்சி செய்தவர் உமாபதி சிவாசாரியார்.

இங்ஙனம் கூறிய உமாபதிசிவம் அறிஞர் எல்லாம் பழையதை நடுநிலை நின்று நோக்கும் இயல்பு குறைவாக உள்ளதையும் உணர்ந்தார். அவர்கள், பலர் புகழ்வதைத் தாமும் புகழ்வதும், பலர் இகழ்வதைத் தாமும் இகழ்வதும் பழக்கமாகக் கொண்டவர் என்றும், எதனையும் ஆராய்ந்து அறியாமல் தமக்கென ஒரு கொள்கை இல்லாதவர்களாக உள்ளனர் என்றும் கூறுகின்றார்.

*"... தவறு நலம் பொருளின்கட் சார்வறாய்ந் தறிதல்*
*இன்மையினோர் பலர்புகழில் ஏத்துவரே திகழுந்*
*நிகழ்த்தினரே இகழ்ந்திடுவர் தமக்கெனவொன்றிலரே!*

சைவ சித்தாந்த உண்மைகளையும் பிறவற்றையும் அறிந்து போற்றுவதற்கு நடுநிலை நின்று ஆராய்ந்து

*The self conceit of an unlearned man will fade away as soon as he speaks in an assembly of the learned.* [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கும் உத்தியைத் தவிர்க்க வேண்டும். தனது சிவப்பிரகாசம் நூலில், இதனை முதலில் உமாபதிசிவம் வெளிப்படுத்துகின்றார். புதிய நோக்கினை வழங்குவதும் அறிஞர்கள் கருத்திற் கொள்ள வேண்டியதொன்றாகும்.

### பொது, உண்மை

பொது, சிறப்பு என்ற இரு சொற்கள் தமிழ் நூல்களில் கையாளப்படுவதைக் காண்போம். சைவத்துக்கு வேதம் பொது ஆகமம் சிறப்பு என்று திருமந்திரம் கூறுகிறது.

*"வேதமோ டாகமம் மெய்யாம் இறைவனூல்*
*ஓதும் பொதுவும் சிறப்பும் என்றுள"*

நூல்களின் உள்ளடக்கத்தைப் பொது அதிகாரம், சிறப்பதிகாரம் எனப் பிரிக்கும் மரபும் உண்டு. சிவஞானபோதத்துக்குச் சிறப்புப்பாயிரம் ஒன்று எழுதப்பட்டுள்ளது.

உமாபதிசிவம் இந்த மரபை மாற்றி, தனது சிவப்பிரகாசம் நூலின் பாடல்களைப் பொது அதிகாரம், உண்மை அதிகாரம் என்று பிரிக்கிறார்.

காரண காரியத் தொடர்புபடுத்திக் கூறுதல் "பொது" என்றும், அறிவோடு அனுபவமும் கூடிய நிலையில் நின்று அறிந்து சொல்வது "உண்மை" என்றும், அவரின் எழுத்துக்களிலிருந்து அறிய முடிகிறது. இந்த அடிப்படையில் அவர் இறை நிலையையும் பார்ப்பதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

இறைவன் தன்னிலையில் இருப்பதைச் சொரூபநிலை என்றும், அருட்செயல் புரிய வரும் நிலையில் இருப்பதை தடத்த நிலை என்றும் வழங்குவது சித்தாந்த வழக்கு. முன்னைய நிலையில் அவனைச் சிவன், தற்பரன், தற்சிவன் என்ற பல பெயர்களில் அழைப்பதை நூல்களில் காணலாம். "தற்பரம் கண்டுளோர் சைவசித்தாந்தரே" என்று திருமந்திரம் கூறுகிறது. பின்னைய நிலையில் அவனைப் பதி என்ற பெயரால் பொது வகையாக அழைப்பதுண்டு. பதி நிலை இறைவன் அருள் புரியும் பொது நிலை. அதற்கு முன்னைய நிலை அவனின் சிறப்பு நிலையான சொரூபநிலை. இதனை உமாபதி சிவம் சொரூப நிலை என்று கூறாமல் "பதிமுது நிலை" என்று தனது திருவருட்பயனிலே எழுதுகிறார். இது மரபு வழிச் செல்லாத அவர் சிந்தனையின் தனித்துவத்தைப் பிரதிபலிக்கிறது.

### சைவசித்தாந்தத்திறன்

வேதமும் ஆகமமும் சைவத்துக்குப் பிரமாணமாகக் கொள்ளப்படுவன. கடவுள் பற்றிய வேதநூற் கருத்துக்கள் பல இடங்களில் ஒன்றுக்கொன்று முரண்பட்டுள்ளன. நீண்ட கால இடைவெளியில் எழுந்த வேதநூல்களில் இந்த முரண்பாடுகளும் வேறுபாடுகளும் இருப்பது இயல்பானதே.

வேத நூல்களில் இறுதியாக வந்த உபநிடதத் தொகுதி வேதாந்தம் எனப்படுகிறது. வேதங்களைச் சிந்தனை வளர்ச்சியுற்ற நிலையில் எழுந்த உபநிடதங்களில் ஒன்றுக்கொன்று முரண்பட்ட சிந்தனைகளைக் காணலாம். ஆயினும் அவை கூறும் கருத்துக்களும் தெளிவற்றுப் பொது வகையாகப் பரந்துபட்டனவாக உள்ளன.

வேதாந்த மகாவாக்கியங்கள் நான்கைக் குறிப்பிட்டு, வேதாந்தத்தார் பொருளாக அவற்றை விளக்குகின்றனர். இந்த மகாவாக்கியங்களும் வேறுபட்ட விளக்கங்களுக்கு இடமளிக்கின்றன. இவ்வாக்கியங்களில் "தத்வமஸி" என்பது பலராலும் விதந்து பேசப்படுவது. மற்றைய வாக்கியங்களை விளக்குவதற்கு இது அடிப்படையாக உள்ளது. தத் - அது; த்வம் - நீ; அஸி - ஆகிறாய் என்று பொருள் கொண்டு "நீ அது ஆகிறாய்" என்று விளக்கம் அளிக்கப்படுகிறது. இவ்வாக்கியம் ஒரு மாணவனுக்கு ஆசிரியர் உபதேசிப்பது. இதனைக் கேட்கும் மாணாக்கன் தன்னை இறைவ

---

உளரென்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்
களரனையர் கல்லா தவர். 406

நூல்களைக் கல்லாதவர் "உயிரோடு உள்ளார்" என்று சொல்லப்படும் அளவினரேயன்றி [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னாகக் கருதும் பாவனையைக் கைக்கொள்கிறான். அவனே இறைவனாக ஆவதில்லை. சீவான்மா பரமான்மாவின் நிலைக்கு உயர்ந்து செல்ல இது வழி வகுக்குமேயொழிய, ஒன்று மற்றொன்றாக ஆவதில்லை.

"அத்வைதம்" என்ற சொல்லுக்கு வேதாந்திகள் காணும் பொருளின் அடிப்படையிலே, மகா வாக்கியங்களுக்கு அவர்கள் விளக்கமளிக் கிறார்கள். த்வைதம் என்றால் இரண்டு; அத்வைதம் இரண்டு அல்லாதது. அதன் பொருள் இரண்டல்ல, ஒன்று என்பது அவர்கள் காணும் பொருள். இதன் அடிப்படையில் இறைவனாகவே உயிர் மாறுகிறது. இது குழப்பத்தை உண்டு பண்ணும் கருத்தாக உள்ளது. இக்குழப்பத்தை நீக்குவ தாக சித்தாந்த விளக்கம் அமைந்துள்ளது.

அத்வைதம் என்றால் இரண்டல்ல என்பது உண்மைதான். ஆனால் அதற்கு ஒன்று என்று பொருள் கொள்ள வேண்டியதில்லை. சேர்க்கை யால் இறைவன் உயிரோடு ஒன்றாகவும், உடனா கவும் இருக்கிறான். ஆயினும் அவன்வேறு, உயிர்வேறு என்பது சித்தாந்தம் அளிக்கும் விளக்கம். 'ஒன்றாய் வேறாய் உடனாய்' இருப்பது சித்தாந்தம் கூறும் அத்வைத உறவு. வேதாந்தம் கூறாத அறிவியல் விளைவிக்கும் விளக்கத்தைச் சித்தாந்தம் வெளிப்படுத்தி இங்கே தருகிறது. அத்துடன் "அது" (தத்) என்று வேதாந்தம் பொது மையில் கூறுவதை, சித்தாந்தம் "சிவன்" என்று கூறுகிறது. இக்காரணங்களால் உமாபதி சிவம் "வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தத் திறன்" என்று தமது சிவப்பிரகாசம் நூலில் கூறுகிறார். சித்தாந்த வழியில் பெற்ற அனுபவ நிலை "சித்தாந்தத் திறன்" என்று குறிப்பிடப்படுகிறது.

சைவ சித்தாந்தத்துக்கு அடிப்படையாக விளங்கும் ஆகமத்தையும் "பெருநூல்" என்று உமாபதி சிவம் தனது சிவப்பிரகாசத்தில் குறிப்பி டுகிறார். இது வேதத்தை விட ஆகமத்துக்கு அவர் மேலான இடம் அளித்துப் பெருமை சேர்ப் பதாகவுள்ளது.

## ஞானம் இரண்டு

சித்தாந்த உலகில் நாம் பெறும் அறிவை மூன்று வகையாகக் கூறுவதுண்டு. இவை பாச ஞானம், பசு ஞானம், பதி ஞானம் எனப்படும். பொதுவாக, கருவிகள் முதலிய பாசப் பொருட்கள் மூலம் பெறும் அறிவு பாச ஞானம் எனப்படும். பாசப் பொருட்களைத் தெளிந்து, தான் அவற்றின் வேறானது என்று உணர்ந்து மேல் நிலை அடை யும் போது, அவற்றின் மேலான மெய்ப்பொருள், தானே என்று உணர்வு வரும். இந்த ஞானம் பசு ஞானம் எனப்படும். இந்த இருவகை ஞானத்தி னாலும் இறைவனை அறிய முடியாது. திருவருளின் துணை கொண்டே அறியமுடியும். திருவருளினால் வரும் ஞானம் பதி ஞானம் எனப்படும். இப்பதி ஞானத்தினால்தான் சிவனை அறியமுடியும் என்பது சித்தாந்த முடிவு.

உமாபதிசிவாசாரியார் மேலான ஞானமாக இருவகை ஞானத்தைக் கூறுகிறார். இவ்வாறு கூறும் பொழுது, கிரியைகள் யாவும் ஞானம் பெறுவதற்குத் துணைசெய்பவை என்று கூறி, ஞானத் துக்கு முதலிடம் கொடுப்பதைக் காணமுடிகிறது. சரியை, கிரியை, யோகம் ஆகிய வழிகளில் பெறும் மெய்ஞானம் முதலிய எல்லா நிலைகளுக்கும் மேலான உயர்ஞானம் ஒன்றுண்டு. அது இருவகை என விளக்குகிறார். ஒருவகை ஞானம், ஆன்மாவு டன் எப்பொழுதும் இருந்து, ஆணவமலம் அகலச் செய்யும் திருவருள் ஞானம்; மற்றையது அந்த ஞானத்தைத் தெளிவாகக் கூறும் சிவாகமங்கள் என்பது உமாபதி சிவத்தின் சிந்தனை முடிவாக உள்ளது.

The unlearned are like worthless barren land; all that can be said of them is that they exist.
406

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மருவியிரு மூன்றுள விரண்டா மாறு
மலமகல வகலாத மன்னு போதத்
திருவருளினால் ஒன்றதனைத் தெரிய வோதுந்
சிவாகமமென் றுலகறியச் செப்பு நூலே"

-(சிவப்பிரகாசம்-6)

இங்ஙனம் உயர் ஞானத்தை இரண்டாகக் கூறும் உமாபதி சிவம் சிவாகமங்களுக்கு உயர் இடம் கொடுப்பதும் குறிப்பிடத்தக்கது.

### முதல் உற்பவம்

ஒருவன் செய்யும் செயலுக்குப் பலனுண்டு என்பதும், அப்பலனைச் செய்பவனே அனுபவிக்க வேண்டும் என்பதும் இந்திய தத்துவங்கள் பலவின் கொள்கையாக உள்ளது. கடவுளை நம்பாத சமணமும் பௌத்தமும் போன்ற சமயங்களும் இந்த வினைக் கொள்கையை ஏற்றுக் கொண்டுள்ளன.

இக்கொள்கையின் அடிப்படையில், ஒருவன் செய்த வினையின் பலனுக்கேற்ப அவனுக்கு மறு பிறவி அமைகிறது. அடுத்த பிறவியில் மீண்டும் வினை செய்து திரும்பவும் பிறவி எடுக்க வேண்டியுள்ளது. இங்ஙனம் வினை செய்வதும், பிறவி எடுப்பதும் ஒன்றன்பின் ஒன்றாகப் பின்னிப் பிணைந்த தொடர் போல வருகின்றன. இங்ஙனம் அடுத்த பிறவியை மறுபிறவி, புனர் உற்பவம், புனர் ஜென்மம் என்று கூறுவர்.

இந்திய தத்துவங்கள் எல்லாம் புனருற்பவம் பற்றிக் கூறுகின்றன. முதன் முதலில் உயிருக்கு எப்படிப் பிறவி வந்தது என்ற விளக்கத்தை அவை அருளவில்லை. உயிரின் முதல் உற்பவத்தைப் பற்றி சைவ சித்தாந்தம் ஒன்றே கூறுகிறது. அதனையும் உமாபதி சிவாசாரியாரே விளக்குகிறார்.

பிறவிகள் எடுக்குமுன் உயிர் ஆணவ இருளால் மறைக்கப்பட்டு, எந்தச் செயலுமின்றி "காரிருளில் கண்ணிலாக் குழவி" போல இருந்தது. இறைவன் உயிரின்மேல் கொண்ட கருணையால், உயிரின் இந்த அவல நிலையை மாற்ற எண்ணுகிறார். மாயையிலிருந்து புரியட்டகாயம் என்னும் நுண்ணுடலை உயிருக்குப் பொருத்த அது சிறிது விளக்கம் பெறுகிறது. இது கண்ணில்லாத ஒருவனுக்குக் கைத்தடி கொடுத்தது போன்றது. புரியட்டகாயம் என்பது மாயா காரியங்களை எட்டுத் தத்துவங்களின் கூட்டாகும். இதனைப் பெற்ற உயிர், அதன்மூலம் சிறிது செயற்படத் தொடங்குகிறது. அதன் செயலின் பலனுக்கேற்ப உயிர் பின்னர் பிறவி எடுக்கின்றது. அதற்குத் தேவையான பரு உடம்பை (தூலவுடம்பை) இறைவனே மாயையிலிருந்து படைத்தளிக்கிறான். இங்ஙனம் பிறவி எடுத்த உயிர், வினை செய்வதும் அதன் பலனுக்கேற்ற உடம்பைப் பெற்று மறுபிறவி எடுப்பதும், மீண்டும் வினை செய்வதுமாக உள்ளது. இங்ஙனம், வினை - பிறவி - வினை என்று பிறவிகள் நீள்கின்றன. இதனை உமாபதி சிவம் தனது போற்றிப்பஃறொடை என்ற நூலில் பின்வருமாறு கூறி விளக்குகிறார்.

*".................. ஞானத்தின்
கண்ணினை மறைத்த கடியதொழில் ஆணவத்தால்
எண்ணும் செயல்மாண்ட எவ்வுயிர்க்கும் - உண்ணாடிக்
கட்புலனால் காணார்தம் கைக்கொடுத்த கோலேபோல்
பொற்புடைய மாயைப் புணர்ப்பின்கண் - முற்பால்
தனுகரண மும்புவன மும்தந்து அவற்றால்
மனமுதலாம் வந்த விகாரத்தால் - வினையிரண்டும்
காட்டி அதனாற் பிறப்பாக்கிக் கைக்கொண்டும்
மீட்டறிவு காட்டும் வினைபற்றி - எப்பிறப்பும்
முற்செயல் இருவினையால் நிச்சயித்து....."*

[illegible]
[illegible] 437
[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்குறட் சிந்தனை

சைவசித்தாந்தக் கருத்துக்கள் வேதாகமங்கள் ஆகிய வடமொழி நூல்களில் உள்ளதுபோல், பைந்தமிழ் நூல்களிலும் திருமுறைகளிலும் விரவிக் கிடக்கின்றன. தொல்காப்பியத்தில் எழுத்து, சொல், பொருள் ஆகியவற்றின் இலக்கணம் கூறப்படும்பொழுது, சைவசித்தாந்தக் கருத்துக்கள் மறைமுகமாகத் தரப்பட்டுள்ளன. உதாரணத்திற்குச் சில தொடர்கள் கீழே தரப்பட்டுள்ளன.

*"மெய் உயிர் நீங்கின் தன்உரு ஆகும்"*
*"மெய்யின் வழியது உயிர்தோன்றும் நிலையே"*
*"வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன்"*
*"வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது நினையும் காலைக் காலமொடு தோன்றும்"*

தொல்காப்பிய காலத்துக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தமிழகத்துச் சிந்தனையில் சைவசித்தாந்தம் வளர்ந்திருந்ததை இதிலிருந்து அறியலாம். இச்சித்தாந்தக் கருத்துக்கள் பல பின்வந்த திருக்குறளிலும் பரவியுள்ளன. திருக்குறட் கருத்துக்கள் எல்லாம் எல்லாச் சமயத்துக்கும் உடன்பாடானவையல்ல. ஆனால், சைவ சமயத்துக்கு உடன்பாடற்ற கருத்துக்கள் எவையும் அதில் இல்லை. இதனாலேயே திருக்குறட் கருத்துக்கள் பின்வந்த சைவசமய பக்தி நூல்களிலும் சித்தாந்த நூல்களிலும் இடம் பெற்றுள்ளன.

சிவாகமங்களுக்கு மேலான இடமளித்த உமாபதி சிவம் திருக்குறளுக்கும் உயர் இடமளித்திருப்பதைக் காணலாம். திருவருட் பயனின் முதற்பாடலே திருக்குறளின் முதற் பாடலைப் பின்பற்றி எழுதப்பட்டதாகத் தோன்றுகிறது.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு" (திருக்குறள்)

"அகர உயிர்போல் அறிவாகி எங்கும்
நிகரில் இறைநிற்கும் நிறைந்து"
(திருவருட்பயன்)

திருவருட் பயனிலுள்ள பல பாடல்களில் திருக்குறட் கருத்துக்கள் உள்ளன.

தனது "நெஞ்சுவிடு தூது" என்ற நூலில் திருக்குறட்பா ஒன்றை ("தலைப்பட்டார் ... அவர்") க் குறிப்பிட்டு, அதன் ஆசிரியரைத் "தெய்வப் புலமைத் திருவள்ளுவர்" என்றும் திருக்குறளை "மெய் வைத்த சொல்" என்றும் உமாபதி சிவம் போற்றுகிறார்.

*"தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி*
*வலைப்பட்டார் மற்றையவர் என்று - நிலைத்தமிழின்*
*தெய்வப் புலமைத் திருவள்ளுவர் உரைத்த*
*மெய்வைத்த சொல்லை விரும்பாமல்."*

திருக்குறளுக்கும் திருவள்ளுவருக்கும் உமாபதிசிவம் மேலான இடம் கொடுப்பதை இப் பாடலிலிருந்து அறிய முடிகிறது. தமிழ்மேல் அவருக்குள்ள ஆழ்ந்த ஈடுபாட்டை உணர்த்துவதாகவும் இது உள்ளது.

இங்ஙனம் உமாபதிசிவத்தின் தத்துவச் சிந்தனை தனித்தன்மை கொண்டு சிறந்து விளங்குவதைக் காணமுடிகிறது.

**நல்லறிவாளர் செயல்**

குரவ ருரையிகந்து செய்யார் விரதங்
குறையுடையார் தீர மறவார் நிறையுளா
மேற்கோளுந் தின்னார் மரங்குறையார் என்பதே
நல்லறி வாளர் துணிவு.

(பொ.உரை) முன்பு கூறப்பட்ட குரவர்கள் சொல்லிய சொல்லைக் கடந்து ஒன்றனையுஞ் செய்யார், முடியாது கிடந்த குறை விரதமுடையார் மிகவருந்தியும் மறந்தொழுகார். மதி நிறைந்த உயர்விலங்குகள் தம் பள் துடைப்பதும் செய்யார், அவ்வுயர்விலங்குகள் மரக்கிளையுங் குறையார் என்று சொல்லப்படுவது நல்லறிவாளர் தொழில்.

ஆசாரக்கோவை

*The beauty and goodness of one who is destitute of knowledge by the study of great and exquisite works, is like the beauty and goodness of a painted earthen doll.* 407.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழநாட்டு மாதோட்ட நன்னகரத் திருக்கேதீச்சரம்

உ. நந்தினி
சைவ சித்தாந்தத் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்

முன்னுரை:

தமிழின் "மூவர்" தனித்தன்மையில் பொலிந்து விளங்கும் ஈழத்தில் சைவத்தின் தொன்மையைக் காட்டுவனவாய சமயாசாரியர்களால் பாடல் பெற்ற திருத்தலங்கள் இரண்டு உள்ளன. அவை திருக்கேதீச்சரமும் திருக்கோணேச்சரமும் ஆகும்.

திருக்கேதீச்சரம் இலங்கைய மன்னார்த் தீவிலிருந்து தெற்கே ஆறுமைல் தொலைவில் உள்ளது. இது இலங்கையின் வடகடல் பகுதித் தலமாக விளங்குகின்றது.

[illegible]

திருக்கோணேச்சரத்தை விட காலத்தால் முந்தியதாகக் கருதப்படும் திருக்கேதீச்சரத்தின் வரலாறு பல்வேறுபட்ட நிலைகளைக் கடந்து வருவதைக் காணமுடிகிறது. நன்னகர்க் கோயிலாய் இருந்து இடர்ப்பாடுகளால் "மருவு நின்ற கேதீச்சரமாக" விளங்குந் தன்மையில் அத்திருக் கோயில் வரலாறு அமைந்துள்ளமையை இக்கட்டுரை தெரிவிக்கின்றது.

## மூர்த்தி தலம் தீர்த்தம் விருட்சம்

[illegible]லிங்கப் பெருமான் திருக்கேதீச்சர ஆலயத்தின் சுயம்புலிங்கத் திருமூர்த்தியினராகக் கருதப்படுகின்றான். கேதுநாதர், நாகநாதர், ஹேம கபிலாய நாதர், [illegible] நாதர், திருக் கேதீச்சர நாதர், மகாதுவட்டாபுர நாதர், கௌரி நாதர், இராசராசேச்சரத்து மகாதேவர் ஆகிய பல பெயர்களில் இறைவன் அழைக்கப்படுகிறான்.

இறைவன் "மாதோட்டம்" என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ளார். தீர்த்தம் "பாலாவி" ஆகும். தல விருட்சமாக "வன்னி" விளங்குகின்றது. இத்தலம் அமைந்த பகுதியும், "வன்னிநாடு" எனலாயிற்று.

## வழிபட்டோர்:

திருமால், பிரமன், இந்திரன் ஆகிய தேவர்களும், அகத்தியர், பிருகு போன்ற முனிவர்களும், பாண்டவர்களில் ஒருவரான அருச்சுனனும், மண்டோதரி, இராவணன், மாலியவான், மயன், பதும கோமளை, சூரபதுமன் போன்ற அசுரர்களும், நாகர்கள், பாண்டியர்கள், சேரர்கள் சோழர்கள் ஆகியோரும், கலிங்க இளவரசன் விஜயனும் அவன் குரு உபதிஸ்ஸனும் ஆகிய பலரும் வழிபட்டுப் பேறு பெற்ற இடமாகத் திருக்கேதீச்சரம் கூறப்படுகின்றது.

மேலும் கேது, மகாதுவட்டா ஆகிய இருவர் வழிபாடு தலவரலாற்றில் குறிப்பிடத்தக்கன. கேது வழிபட்டதனால் 'திருக்கேதீச்சரம்' எனவும் மகாதுவட்டா வழிபட்டதனால் 'மாதோட்டம்' எனவும் கூறப்படுகின்றது.

இத்தலத்தில் தேவர்கள் அர்த்தயாம பூசை செய்வதாக மரபு உண்டு. புரட்டாசி மாத பூர்வபட்ச சதுர்த்தசித் திதியே தேவர்கள் அர்த்தசாம பூசை செய்யும் நாளாகக் கூறப்படுகின்றது.

"மாதோட்டம்" என்ற நகரத்தில் அமைந்த திருக்கோயில் திருக்கேதீச்சரம் ஆகும். இத்திருக் கோயில் தொன்று தொட்டு நாகர்களாலும் கேதுவாலும் வழிபடப்பட்டதாகும், புரத்தின் கண் உள்ள கோயிலான "மாதோட்ட நன்னகர்த் திருக்கேதீச்சரம்" எனப் பெயர் பெறக் காரணமாக இருந்தவர் "மாதுவட்டா" என்பவர் என்று புராணம் கூறும்.

சூரபதுமனின் மனைவி பதுமகோமளை என்பவளின் பாட்டன் பெயர் "துவட்டா" என்பதாம். அவர் "மகாதுவட்டா" என்றும் "மாதுவட்டா" என்றும் கூறப்படுபவர். அவர் நீண்ட காலம் மக்கட் பேறின்றி, திருக்கேதீச்சரம் வந்து பாலாவித் தீர்த்தமாடிக் கேதீச்சரப் பெருமானை வழிபட்டார். பின் அவருக்குப் பிள்ளைப் பேறு வாய்த்தது. எனவே, அவ்விடத்தை நகரமாக்கி அங்கு வாழ்ந்திருக்கின்றார். அவரால் நிர்மாணம் செய்யப் பெற்று நன்னகரமாக விளங்கிய அவ்விடம் "மாதோட்டம்" எனப்பெற்றது. மாதுவட்டா என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் மொழி மருவி "மாதோட்டம்" என்ற பெயரில் அந்நகரம் விளங்கியது என்பர். மாதோட்டம் என்ற பெயரை விளக்கி ஈழத்தின் பெருந்துறை (மா - பெரியதோட்டம் - துறை) என்றவாறு மாதோட்டத்திற்கு விளக்கம் கூறியுள்ளனர்.

**வரலாற்றுத் தொன்மை ஆதாரங்கள்:**

தொன்மைக் கால "கோயிற்பட்டினம்" (City of Temple) ஆக விளங்கியது மாதோட்டம் ஆகும். அங்குள்ள ஆலயமாகிய திருக்கேதீச்சரம் 3000 சதுர மைல் பரப்பளவு கொண்ட "வன்னி நாட்டைச்" சேர்ந்தது. இது பாலாவி நதிக்கரையில் விளங்கியது. அந்நதியின் முகத்துவாரத்தில் இருந்த துறைமுகம் "மாந்தை" ஆகும். அவ்விடம் இன்றும் "வங்காலை" என்ற பெயரால் விளங்கி வருகின்றது. வங்கம் என்பது கப்பலையும், காலை என்பது தங்குமிடத்தையும் குறிக்க, கப்பல்கள் வந்து தங்குமிடமாக மாந்தைத் துறைமுகம் இருந்ததன் பெயர்க்காரணமும் விளக்கமுறுகின்றது.

நகரின் மாளிகைகள் நிறைந்து இருந்த காரணத்தால் "மாளிகைத்திடல்" என்றும் அந்தணர்கள் கூடி இருந்தமையால் "பாப்பா மோட்டை" எனவும், கோயிற்குரிய குளம் இருந்த இடம் என்பதனால் "கோயிற்குளம்" என்றும் சுட்டப்பெற்ற பெயர்கள் இன்றும் திருக்கேதீச்சரத்தில் இருந்து வருவதால் கோயிற் பட்டினமாக அவ்விடம் அக்காலத்தில் திகழ்ந்தமை புலப்படுகிறது.

கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் "மகாதித்தா" என்ற பெயரில் மாதோட்டம் பற்றிய குறிப்பு பௌத்த இலக்கியங்களில் காணப்படுகிறது. கி. மு. ஆறாம் நூற்றாண்டில் கலிங்க இளவரசன் விஜயன் என்பவன் மாந்தைத் துறைமுகம் வந்திறங்கித் திருக்கேதீச்சரம் வழிபட்டிருக்கின்றான். அவனுடன் அவனின் பிராமண குருவான உபதீசன் என்பவனும் வந்து திருக்கேதீச்சரத்தை வழிபட்டு இருந்திருக்கின்றான். "யாழ்ப்பாண வைபவமாலை" என்னும் நூல் திருக்கேதீச்சர ஆலயத்தை விஜயன் புதுப்பித்துக் கட்டியமையையும் கூறுகின்றது.

கி. பி. நான்காம் நூற்றாண்டு வரையில் திருக்கேதீச்சர ஆலயத் தொன்மைக்கான வரலாற்று ஆதாரங்களை ஓரளவு காண முடிகிறது. புத்தரின் "தந்ததாது" வரலாற்றில் திருக்கேதீச்சரம் பற்றிய குறிப்பைக் காணமுடிகிறது.

மகாசேனன் (கி. பி. 276 - 303) என்பவன் திருக்கோணமலையிலும் வேறு சில இடங்களிலும் இருந்த சிவலிங்கத் தலங்களை அழித்தவன் என்று மகாவம்சமும் மகாவம்ச டீகையும் கூறும். அவன் மகன் ஸ்ரீ மேகவர்ணன் (கி. பி. 303 - 331) காலத்தில் தான் பௌத்த புனிதச் சின்னமான "தந்ததாது" இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டது எனப்படும்.

புத்த தந்தம் பகைவர்களால் பறிக்கப்படாமல் காத்தற் பொருட்டு கலிங்கத்திலிருந்து கொண்டு வரும் வழியில், கொண்டு வந்தவர் மாந்தோட்டை யடைந்து இரவு ஓர் ஆலயத்தில் தங்கியதாகக் கருதப்படும். அவ்வாலயம் திருக்கேதீச்சரமே ஆகும்.

கி. பி. ஏழு எட்டாம் நூற்றாண்டுக் கால திருக்கேதீச்சரத்தைத் திருஞானசம்பந்தர் மூலமும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் வாயிலாலும் அறிய முடிகிறது. அவர்கள் காலத்திலே மாதோட்டம் நல்ல நகரமாக விளங்கியிருக்கிறது. தொண்டர்கள் நாள்தோறும் துதி செய்யும் இடமாக திருக்கேதீச்சரம் இருந்திருக்கிறது. பாலாவி நதிக்கரையின் மேல் இருந்திருக்கின்றது. அதனை புரளப் பாய்ந்த ஆறாக பாலாவி ஓடியிருக்கிறது. கடலும் ஆறும் சூழ்ந்த நகராக மாதோட்டம் விளங்கியது. "வரை பார் கடல் சூழ்ந்த நீழ் மாதோட்ட நன்னகர்" என சுந்தரரால் சுட்டப் பெற்றிருக்கின்றது.

கி. பி. பத்தாம் நூற்றாண்டின் இரு சிங்களக் கல்வெட்டுக்களிலும் கதிர்காமக் கல்வெட்டிலும் திருக்கேதீச்சரப் பெருமை இலங்கையின் தலைநகரமாகிய அநுராதபுரம், தென்கோடி கதிர்காமம் ஆகிய இடங்களில் எல்லாம் விளங்கி இருந்தமையைக் காண முடிகின்றது. பத்தாம் நூற்றாண்டின் இறுதியில் இலங்கையில் சோழர் ஆட்சி இருந்தபோது திருக்கேதீச்சரத்திற்கு "இராசராசேசுவர மகாதேவன் கோவில்" என்ற பெயர் இருந்திருக்கின்றது. மாதோட்ட மருங்கு என்னும் திருக்கேதீச்சர இறைவன் கேது நாதர், இராசராசேச்சரத்து மகாதேவர் என்று அழைக்கப்பட்டதாக இராசேந்திர சோழன் கல்வெட்டுக் கூறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி. பி. 6, 7 ஆம் நூற்றாண்டுச் சோழர்கள் ஆட்சியில் விளங்கிய திருக்கேதீச்சரம், கி. பி. 12ம் நூற்றாண்டில் சேக்கிழார் பெருமானால் பெரிய புராணத்தில் பாடப் பெற்றிருக்கின்றது.

கி. மு. மூன்றாம் நூற்றாண்டு தொடக்கம் கி. பி. பதினொராம் நூற்றாண்டு வரை தொடர்ந்து திருக்கேதீச்சரம் மாதோட்ட நன்னகரில் சிறந்த வழிபாட்டுத் தலமாக விளங்கிய தன்மையினை ஓரளவு அறிய முடிகிறது. அதன் பின்னர் தெளிவான வரலாற்றுக் குறிப்புகள் கிடைக்காவிடினும் ஆலயம் வழிபாட்டுத்தலமாக விளங்கி இருந்திருக்கின்றது. ஆனால் கி. பி. பதினாறாம் நூற்றாண்டு தொடங்கி திருக்கேதீச்சரம் சோதனைக்கு உள்ளான வரலாற்றைப் பெற்றிருக்கிறது. எனவே கி. பி. 16ஆம் நூற்றாண்டு தொடங்கி இன்று வரையுள்ள நிலை பின்னர் விளக்கப் பெறுகிறது.

**கேதீச்சர வரலாற்றுச் சிறப்புகள்:**

கி. மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து மகாதீர்த்தம் (மஹாதித்த) என்ற சிறப்புடையதாக மாதோட்டம் (மன்னார்) பௌத்த இலக்கியங்களால் கூறப்பட்டிருக்கிறது. நகரும் மஹாதித்த பட்டினம், மஹா தீர்த்த பட்டினம், மாதோட்டம் என்றவாறு எல்லாம் பட்டினம் காணக்கூடியதாக உள்ளது. மகாதீர்த்தம் என்ற பெயரைப் "பாலாவி" நதி பாய்வதாலேயே பெற்றிருக்க வேண்டும். சுந்தரமூர்த்தி சுவாமிகள் காலத்தில் பாலாவி நதி பெருக்கெடுத்து ஓடியதாகத் தேவாரத்தால் அறிய முடிகின்றது.

மாதோட்டப் பகுதியின் பரந்த வெளிக்கூடாக ஓடிய நீரும் மலைத்து ஓடியவும் பாலாவி என்ற பெயரில் மாந்தைக் கடலில் கலந்தது எனவும், மலைத்து ஓடிய பின்னர்த் தென் பகுதியில் மேற்குப் பக்கம் பாய்ந்தது என்றும் அறிஞர் கூறுவர். மேலும் பிற்காலத்தில் கட்டப்பெற்ற மாபெருங்குளம் (Giants Tank) பாலாவியை இரண்டாகப் பிரித்து விட்டது. பிரிந்த நீரின் ஒரு பகுதி "அருவியாறு" என்ற பெயரில் மன்னாருக்குப் பல கல் தொலைவில் கடலுடன் கலக்கிறது. பாலாவி பின்னர் பட்டினம் மாந்தைத் துறைமுகம் இருந்த பாலாவி முகத்துவார சேறாகிப் பின் அரசின் புறக்கணிப்புக்குட்பட்டதனால் மறைந்து போய் விட்டது.

பாலாவி முகத்துவாரத்தில் இருந்த மாந்தைத் துறைமுகம் தென்மேற்குப் பருவக் காற்றால் பாதிக்கப்படாத இடமாக இருந்தது. இயற்கையாக இருந்த அத்துறைமுகம் "மாந்தை" என மருவியிருக்கலாம் என்று கருத இடமுண்டு. ரோமர் ஆட்சியின் பவளப் பாறைக்குள் மன்னார்த் துறைமுகத்திற்கு நெருங்கிய சில மைல் தொலைவில் இருந்தது. பண்டைக் காலத்து அரபியர்கள் வழி கப்பற் போக்குவரத்துமூலம் ஏனோர நேரம் மேற்குப் பருவக் காலத்தில் பாதுகாப்புத் துறைமுகமாக மாந்தைத் துறைமுகம் இருந்திருக்கின்றது. மாந்தைத் துறைமுக வழியே இராமர், அருச்சனை செய்ய ஆழியோர் வந்திருக்கலாம் என்றும் கருதப்படுகின்றது.

பாலாவியும் மாந்தைத் துறைமுகமும் கொண்டு விளங்கி "மாதோட்ட நன்னகர்" என்பதை உறுதிப்படுத்துகின்றன. மாதோட்ட நன்னகர் இறைவனாகத் திருக்கேதீச்சரத்தான் அறியப் பெறுகின்றான். அவ்வாலயத்தில் சுந்தரரும்,

"வாழையம் பொழில் சூழ் கடல் மாதோட்ட நன்னகர்" என்றும் கூறியமை கவனிக்கத்தக்கது.

*"நன்னகர் மாந்தை முற்றத்து ஒன்னார்*
*பனித்துறை கொண்ட நெடிய நல்லவர்"* - அகநானூறு
*"புன்னைச் சோலை புணர்மெட்டு சூழ் மாந்தை"*

முத்தொள்ளாயிரம்

பாலாவி முகத்துவார மாந்தைத் துறைமுகச் சிறப்பு வழி கி. மு. பதினோராம் நூற்றாண்டிலிருந்து மன்னார் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளாக மாதோட்டம் சிறப்புப் பெற்றிருக்கிறது என்று வரலாற்றுத் தொன்மைச் சிறப்பு வழி காட்டுவார்கள்.

**கேதீச்சரம் குறித்த நூல்கள்**

திருக்கேதீச்சரத் தொன்மை குறித்து பழமையான இலக்கியங்கள் பௌத்த சிங்கள இலக்கியங்களே ஆகும்.

"மகாவம்சம்" என்ற நூல் புத்தரின் அந்தாதி வரலாற்றைக் கூறுவது. அதன் மூலம் திருக்கேதீச்சரத்தின் மூன்றாம், நான்காம் நூற்றாண்டு வரலாறுகளை அறியப் பெறுகின்றன. இது கூறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரேய்திரின் தொடர்பில் மகாவம்சம், மகாவம்சம் ஆகிய நூல்கள் அமைந்துள்ளன.

இலங்கையின் மரபு வழி வரலாறு கூறும் மகாவம்சம், குளவம்சம் ஆகியன மாதோட்ட நகர் பிற நாடுகளுடனான தொடர்பை விஜயன் காலந்தொட்டுச் சிலவற்றைக் கூறுகின்றது.

கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் "மகதித்தா" என்ற பெயரில் விளங்கிய தாகப் பௌத்த நூல்கள் திருக்கேதீச்சரத்தைக் குறிக்கின்றன. விஜயன் என்ற இளவரசனுடன் வந்த உபதிஸ்ஸன் கேதீச்சரத்தைப் புதுப்பித்து வழிபட்டான் என "யாழ்ப்பாண வைபவ மாலை" என்ற நூல் கி. மு. ஆறாம் நூற்றாண்டுச் செய்தியைக் கூறுகின்றது.

கி. பி. ஆறு, ஏழு, எட்டாம் நூற்றாண்டுக் கால திருக்கேதீச்சரச் சிறப்பை வெளிப்படுத்துவனவாக திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகியோரின் தேவாரங்கள் உள்ளன.

தட்சிண கைலாய மகாத்மியம் பற்றி வடமொழி ஸ்கந்த புராணத்தில் கூறப்படுகின்றது. அதில் ஸ்ரீ கேதீச்சர வைபவம் பற்றியும் கூறப் பெற்றுள்ளது.

"பெருமை வாய்ந்த தட்சிணகைலாசம் என்னும் திருக்கோணாசலத்திலே சிவபெருமான் உமையம்மையாருடன் பிரத்தியட்சமாக இருத்தலினாலும் மாதோட்டம் என்னும் திருக்கேதீச்சரத்திலே அடியார்களுக்கு அருள்புரியும் நோக்கமாகக் கௌரியம்பிகை சமேதராய்ப் பிரத்தியட்சமாக அதிசயஞ் செய்து கொண்டிருத்தலினாலும் இவ்விலங்கா தேசமானது 56 தேசங்களிலும் சிறந்ததாக இருக்கின்றது. இதற்கொப்பான தேசம் பிறிதொன்று உண்டானதுமில்லை, இனி உண்டாவதுமில்லை" (ஸ்ரீமத் தக்ஷிணகைலாச மஹாத்மியஸ்தித ஸ்ரீகேதீஸ்வரக்ஷேத்திர வைபவ மூலம் க. ஸ். வைத்தியநாதசிவம் எழுதிய உரை அத்தி.3)

"எவ்வருணத்தினராயினும் எக்குலத்தினராயினும் பாலாவித் தீர்த்தத்திலே மூழ்கித் திருக்கேதீச்சர தரிசனம் செய்வாரேல் போகம் மோக்ஷம் இரண்டையும் பெறுவான். இத்தலத்துக்கிணையான புண்ணிய க்ஷேத்திரம் உண்டானதும் இனியுண்டாவதுமில்லை" (மேற்படி நூல் அத்தியாயம் 3: பக்கம் 12-13) என்றவாறு திருக் கேதீச்சர சிறப்பு பற்றி சூத முனிவர் நைமிசாரண்ய முனிவர்களுக்குக் கூறுமாறு சுட்டப்பெற்றுள்ளது.

"இராஜரத்னாகர" என்ற சிங்கள நூல் ஒன்று பத்தாம் நூற்றாண்டுகளில் திருக்கேதீச்சரம் சிறப்புற்றிருந்தமையைக் கூறுகின்றது. மேலும் "மாந்தைப்பள்ளு" என்ற நூலும் மாதோட்டம் பற்றிக் கூறுகின்றது.

பிற்காலத்தில், திருக்கேதீச்சரம் புனருத்தாரண கர்த்தாவான ஆறுமுகநாவலரின் மாணவர் ம. க. வேற்பிள்ளை என்பவர் எழுதிய "ஈழமண்டல சதகம்" என்ற நூலும் ஒன்றாகும்.

"திருக்கேதீச்சர நாதர் திருப்பதிகம்" 1949 இல் நயினை ஐ. இராமச்சந்திரனால் இயற்றப் பட்டது. "திருக்கேதீச்சர நாதன் கிள்ளை விடு தூது" எனும் நூலை புங்குடுதீவு சி. இ. சதாசிவம் பிள்ளை 1963 இல் இயற்றினார். இவரே 1976இல் "கௌரிநாயகி பிள்ளைத் தமிழ்" பாடியுள்ளார். "திருக்கேதீச்சரநாதன் ஊஞ்சல்" கொக்குவில் த. குமாரசுவாமிப் பிள்ளையால் 1966 இல் எழுதப்பட்டது. 1966 இல் நல்லூர் பண்டிதர் ச. இராமசந்திரன் "திருக்கேதீச்சரப் புராணம்" ஒன்றை இயற்றியுள்ளார். தவிர 1970 இல் அச்சுவேலி சிவஸ்ரீ ச. கு. வைத்தீஸ்வர குருக்களும் ஓர் "திருக்கேதீச்சரப் புராணம்" எழுதியுள்ளார்.

மேற்கூறப் பெற்ற நூல்களெல்லாம் திருக் கேதீச்சரம் பற்றி தனித்தனி அமைந்தவை. திருக் கேதீச்சரத்தில் சைவமாநாடு ஒன்றும் நடந்து திருக்கேதீச்சர சைவமாநாட்டு மலர் 1960 இல் வெளியிடப் பெற்றுள்ளது.

1887 நவம்பர் 7இல் திரு. டபிள்யூ. ஜே. எஸ். போக் என்பவர் படித்த அறிக்கை இடம்பெற்ற Royal Asiatic Society Journal Volume No. 35 என்ற நூற்பகுதியும், திருக்கேதீச்சர மாதோட்ட நகர் அழிக்கப்பட்டதைச் சுட்டிக் காட்டுகின்றது. திருக் கேதீச்சரம் பற்றிய பல்நிலை வரலாறும் பலரானும் தொகுக்கப்பெற்று கிடைக்கும் நூலாக 04/11/1976 இல் திருக்குடத் திருமஞ்சன விழாவின் போது வெளிவந்த, "திருக்கேதீச்சரம் திருக்குடத் திருமஞ்சன மலர்" தெரிவிக்கின்றது. இந்நூற் செய்திகளின் அடிப்படையிலும் தேவாரப்பாக்கள் அடிப்படையிலும் இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பிற்காலத்தில் திருக்கேதீச்சர வரலாறு

நன்னகராகச் சிறப்புற்று தொன்மை உடையதாகத் திகழ்ந்த திருக்கேதீச்சரம் போர்த்துக்கேயர்கள் காலத்தில் இடித்தழிக்கப்பட்டது.

மன்னாரைப் போர்த்துக்கேயர்கள் கி. பி. 1590 இல் அடிமை கொண்டனர். அதற்கு முன்பே வழிபாடு நடைபெற்ற இடமாகத் திருக்கேதீச்சரம் இருந்திருக்கின்றது. கி. பி. 1540 இல் திருக்கேதீச்சரத்தின் ஒரு பகுதி கடலால் கொள்ளப்பட்டாலும் கி. பி. 1589 வரை வழிபாடு நடைபெற்று வந்ததாக அராலி விசுவநாத சாஸ்திரியாரின் சம்பவக் குறிப்பு தெரிவிக்கின்றது என்பர்.

போர்த்துக்கேயர்கள் திருக்கேதீச்சர ஆலயத்தை இடித்துச் சூறையாடி இருக்கின்றனர். இதனை வலியுறுத்தும் செய்திகள் பின்வருமாறு அமைகின்றன.

மன்னார்ப் பகுதியில் பெரிய, சிறிய இருபது சைவ விக்கிரகங்கள் ஒளித்து வைக்கப்பட்டிருந்தன என்று கூறும் குவிறோஸ் சுவாமிகளின் குறிப்புகளும், கூத்தோ என்பார், "அப்பகுதியில் மிகப் பெரிய உருக்குச் சங்கிலி கிடைத்தது" என்று கூறும் செய்தியும், கேதீச்சர விக்கிரகங்கள் களவாடப்பட்டு மறைக்கப்பட்டும், உருக்கப்பட்டும் எடுத்துச் செல்லப்பட்டமையைக் காட்டுகின்றன. மேலும், மாதோட்டத்தில் முதலாவதாகக் கட்டப்பட்ட கிறித்தவ தேவாலயம் ஒன்றின் பெரிய மணி கேதீச்சர விக்கிரகங்களை உருக்கிச் செய்யப்பட்டுப் பயன்படுத்தப்பட்டதாயும் பிற விக்கிரகங்கள் அதனைச் சுற்றிப் புதைத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் கூறுவர். அத்துடன் திருக்கேதீச்சரக் கோயில் கற்களை எடுத்துச்சென்று மாந்தைத் துறை முகத்தைக் கட்டியதாகவும் கூறுவர்.

பின்னர் டச்சுக்காரர்கள் காலத்திலும் மாதோட்டத்தில் சிலைப் பகுதிகள் மருவியிருந்தமையை, "மாதோட்டத்திலிருந்து சாசனம் பொறிக்கப்பட்ட தூண் ஒன்று கொண்டு வரப்பட்டு ஊர்காவற் றுறையில் உள்ள வெடியரசன் கோட்டையில் (கடல் கோட்டை) வைக்கப்பட்ட செய்தியால் அறியமுடிகின்றது.

போர்த்துக்கேயர் மதமாற்றத்திற்கு மக்களை உட்படுத்திய வகையில் ஏற்பட்ட போராட்டமும், செல்வங்களைக் கொள்ளையடிக்க எண்ணிய எண்ணமும் சேர்ந்து திருக்கேதீச்சரத்தைப் போர்த்துக்கேயர்கள் அழித்திருக்கின்றனர் என்பது புலப்படுகின்றது.

### திருக்கேதீச்சரம் கண்டு தொழவைத்த வரலாறு

மூன்று நூற்றாண்டுகளுக்குப் பின்னர் கி. பி. 1887 இல் தான் திருக்கேதீச்சரம் ஆறுமுக நாவலர் மூலம் உலகிற்குத் தெரியவந்தது. அவரின் தேவார அறைகூவலால் திருக்கேதீச்சரம் தெளிவு பெற்று, "யாழ்ப்பாணச் சமய நிலை" என்ற நூலின் இறுதிப் பகுதியில் பின்வரும் செய்தியாக வெளிவரப் பெற்றது.

"சைவ சமயிகளே! தேவாரம் பெற்ற சிவத் தலங்களுள் இரண்டு இவ்விலங்கையில் உள்ளன. அவைகளுள் ஒன்றாகிய திருக்கோணமலைக்குச் சம்பந்தமூர்த்தி நாயனார் திருப்பதிகம் ஒன்றிருக்கின்றது. மற்றொன்றாகிய திருக்கேதீச்சரத்துக்கு திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் திருப்பதிகம் ஒன்றும் சுந்தரமூர்த்தி நாயனார் திருப்பதிகமொன்றும் இருக்கின்றன.

இத்திருக்கேதீச்சரம் வட மாகாணத்தின் கண்ணுள்ள மன்னாருக்கு அருகி சமீபத்திலிருக்கின்ற மாதோட்டத்தில் உள்ளது. இத்திருக்கேதீச்சரம் அழிந்து காடாகக் கிடக்கின்றதே! புதிது புதிதாக இவ்விலங்கையில் எத்தனையோ கோயில்கள் கட்டப்படுகின்றனவே! நீங்கள் இந்த மகா ஸ்தலத்தைச் சிறிதும் நினையாதது என்னவோ! இவ்விலங்கையிலுள்ள விபூதிதாரிகள் எல்லோரும் சிறிது சிறிது உபகரிக்கினும் எத்துணைப்பெருந் தொகைப்பொருள் சேர்ந்துவிடும். இதை நீங்கள் எல்லோரும் சிந்தித்தும் இத்திருப்பணியை நிறைவேற்றுவீர்களாயின் அருட் கடலாகிய சிவபெருமான் உங்களுக்கு அனுக்கிரகம் செய்வார்".

இந்த அறிக்கை கண்டதும் முதலில் முயற்சித்தவர் விடத்தல் தீவு வீ. வேலுப்பிள்ளை என்பவர் ஆவார். பின்னர், கொழும்பு தம்பையா முதலியார், சுபதார் வைத்திலிங்கம், மாத்தளை

கரத் தெண்டி ஒப்பந்தக்காரர் ஆசைப்பிள்ளை நல்லூர் கந்தசாமி கோயில் முகாமையாளர் ஆகியோர் திருக்கேதீச்சர இடத்தை வாங்க முற்பட்டனர். ஆனால் 1887ல் நடந்த ஏலத்தில் அரசினர் விதித்த நிபந்தனைகளால் வாங்க இயலவில்லை. அவர்கள் பழைய கோயிலை வாங்க முயற்சி செய்தாலும், அங்குள்ள பொருட்களைப் பெறவே முயற்சி செய்துள்ளனர் எனக் கருதப்படும். மன்னார் கத்தோலிக்கர் இவ்விடத்தைக் கோரியிருந்ததாலும் வலுவில் அதிகமாக இருந்ததாலும் திருக்கேதீச்சரம் அப்போது பெறப்படவில்லை.

இந்நிகழ்ச்சிகள் நிகழ்ந்தபோது மன்னார் அதிபராக இருந்தவர் "டைவைனம்" என்பவராவர். அவரே திருக்கேதீச்சரத்தை முதலில் பெறுதற்குத் தடையாயிருந்தவர். டைவைனம் உத்தியோக நடைமுறையில் ஊழல் புரிந்தவரெனவும் அவர் வேதசனாத்துரோகி என்று நாவலரால் குற்றம் சாட்டப்பட்டதாகவும் செய்திகள் கிடைக்கின்றன.

நாவலர் பெருமான் மறைந்த பின் துணிவுடன் திருக்கேதீச்சரத்தைச் சைவர்களுக்குத் ஆக்கினைத் திருக்கிறார். 1890இல் சைவப்பெரியவர்கள் வேண்டுகோளின்படி திருக்கேதீச்சர நிலம் சைவர்களுக்கே தரப்பட வேண்டும் என்றும் அரசினர்க்கு விண்ணப்பம் செய்யப்பட்டிருக்கிறது.

திருக்கேதீச்சரம் என்று கருதப்பட்ட இத்தலத்தைப் பற்றி (Royal Asiatic Society Jounal Volume No. 35) திருக்கேதீச்சரம், மகாதீர்த்தம், மாதோட்டம் அல்லது மாதோட்டை என்ற தலைப்பில் டபிள்யூ. ஜே. எஸ். போக் என்பவர் 07-11-1877 இல் படித்த அறிக்கை எடுத்துக் காட்டுகிறது. பழைய நகரின் ஒரு செங்கல், சிற்பங்களின் பகுதிகள் முதலியன அங்கே காணப்பட்டது அக்காலத்தில் இருந்த சேர். பொன் இராமநாதன் அவர்கள், போக் கூறிய செய்திகள் சிலவற்றை மறுத்து, நன்னீர் அகழி, கடல் நீர் அகழி இரண்டையும் கூறி "போக்" கூறிய இடம் நகரின் எல்லைப்பகுதி என்பதை காட்டிக்காட்டி ஆலயத்தைச் சுற்றி அகழி இருந்தது என்றார்.

சேர் வில்லியம் டுவினம் அவர்களால் 13/12/1893 இல் ஏலம் போடப்பட்ட, மண்மேடாயும், காடாயும் இருந்த நாற்பது ஏக்கர் நிலம் திரு. அரு. பழனியப்பச் செட்டியார் அவர்களால் ரூபாய் 3100/=க்கு வாங்கப்பட்டது.

1894இல் தை மாதத்தில் திருக்கேதீச்சர இடத்தை அகழ்ந்து கேதீச்சரப் பெருமானைக் காண ஆவன செய்தவர் வண்ணை சிதம்பரம் பசுபதிச் செட்டியாரவர்கள். அதற்காக அப்போது மட்டும் அவர் செலவிட்ட தொகை ரூபாய் 8,000/= இருக்கும் மேலாகும். 13-06-1894 (ஜய ஆண்டு ஆனி மாதம்) அன்று, சிவலிங்கம், நந்தி, விநாயகர் முதலிய திருவுருவங்களும், சோமாஸ்கந்த மூர்த்தமும் கிடைக்கப்பெற்றது.

பசுபதிச் செட்டியார் அவர்களுடன் இ. இராமுப்பிள்ளை வைத்தியர், தா. இராசகோபாலபிள்ளை ஆகியோரும் சேர்ந்து உதவி செய்து திருக்கேதீச்சரத்தைக் காப்பாற்றும் பணியாற்றினார்கள். அவ்வகையில் 28-06-1903 இல் சிறிய கோயில் ஒன்று கட்டப்பெற்று முதல் திருக்குடமுழுக்கு நடைபெற்றது. முதல் திருக்குடமுழுக்குக்குக் கண்டெடுக்கப்பட்ட ஆதி இலிங்கம் கருவறையில் அமைய இயலாமல் அகழ்வின் போது அடிபட்டு விட்டது. அதனால் காசியில் இருந்து இலிங்கம் கொண்டுவரப்பெற்று திருக்குட முழுக்குச் செய்யப் பெற்றது.

பின்னர் பல திருப்பணிகள் நடைபெற்று கி. பி. 1910 இல் இரண்டாவது திருக்குடமுழுக்கு நடைபெற்றது.

1952 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் மதுரை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகளால் திருக்குடமுழுக்கு செய்து வைக்கப்பட்டது. இதற்கு 19/09/1948 அன்று கொழும்பில் பம்பலப்பிட்டி நகரத்தார் கதிரேசன் கோயிலில் கூடிய "திருக்கேதீச்சரப் புனருத்தாரண சபை" பணி புரிந்தது. இப்புனருத் தாரண சபை, 1948 அக்டோபர் 3, 4 ஆம் திகதிகளில் திருக்கேதீச்சரத்தில் நடந்த ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டச் சைவ மாநாட்டின் வழி அமைந்தது ஆகும்.

31/10/1960 இல் திருக்கேதீச்சரத்திற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயச் சம்புரோக்ஷண ஆலயங்களுடன் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இக்காலத்தில் சேர். கந்தையா வைத்தியநாதன் பெரும்பணி புரிந்திருக்கின்றார்.

மண்ணிடமாய் இருந்த பாலாவியை வெட்டி அணைகட்டி நீர் தேங்கி ஓடும் நிலைக்கு ஆக்கிப் பணி செய்தவர் நீர்ப்பாசனப் பொறியியலாளர் திரு. எஸ். ஆறுமுகம் ஆவார்.

இவ்வாறு பாலாவியுடன் கேதீச்சரமும் கண்டு தொழ வாய்த்த திருக்கோயில் அடியார் நாள்தோறும் வணங்குவதற்கு மீள 04/07/1970 இல் இ. நமசிவாயம் அவர்கள் செயலாளராக இருந்த திருப்பணிச் சபையால் திருக்குடத் திருமுழுக்கு நடை பெற்றது. அப்போது திருக்கேதீச்சர ஆலயத் திருப் பணிச் சபையால் மலர் ஒன்றும் வெளியிடப் பெற்றது. அப்போது ஏழு தொன் மூன்று அந்தர் ஒருகுவாட்டர் இருபத்தாறு இறாத்தல் உள்ள வெண்கலமணி ஒன்று இலண்டனில் இருந்து வார்ப்புச் செய்யப்பெற்று வரவழைக்கப் பெற்றிருந்தது.

நாயன்மார்கள் வழிபாட்டின் அடிப்படையிலும் நாயன்மார் வாழ்வியல் அடிப்படையிலும் சிவயோக நெறியும் அதற்கு மூலமான இலிங்க வழிபாடும் உறுதிப்படுகின்றது. அவ்வகையில்,

*"மேரு நடுநாடி மிக்கு இடை பிங்கலை*
*கூரும் இவ்வானின் இலங்கைக் குறியுறும்*
*சாருந் தில்லைவனத் தன் மா மலயத்தூடு*
*ஏறுஞ் சுழுனை இவை சிவ பூமி."*

என்ற திருமந்திர வாக்கின் படி, ஈழம் சிவ பூமியாகி அதன் ஆதார இலிங்கத்தை உடையதாகத் திருக்கேதீச்சரம் விளங்குவதென்பதைக் காணலாம்.

"மாதோட்ட நன்னகர்" என்று பாடல்கள் ஒவ்வொன்றிலும் குறிப்பிடும் சுந்தர மூர்த்தி சுவாமிகள்,

*"மூவரென இருவரென முக்கண்ணுடை மூர்த்தி*
*மாவின்கனி தூங்கும் பொழில் மாதோட்ட நன்னகரிற்*
*பாவம் வினை அறுப்பார் பயில் பாலாவியின்கரைமேல்*
*தேவனெனை ஆள்வான் திருக் கேதீச்சரத் தானே"*

*- சுந்தரர் (9)*

என்று திருக்கேதீச்சரத் திருப்பதிகத்து ஒன்பதாம் பாடலைப் பாடுகின்றார்.

மும்மலங்கள் மூர்த்தியான மகாலிங்கப் பெருமான் இரண்டுபாதாக அமைந்து திடமாகக் கருதுகின்ற போதும், இப்போது இல்லாதுள்ளான். அவன் மூவரென ஆதல்வேண்டும், என்பது சுந்தரர் கூற்று.

முடிவுரை

முற்காலத்திலும் மணலால் மூடப்பட்டு வெளி வந்து, நாயன்மார் காலத்தில் பொலிந்திருந்து, போர்த்துக்கேயரால் கி. பி. 16 இல் அழிக்கப் பெற்றது திருக்கேதீச்சரம். பின் ஆறுமுக நாவலர் அவர்கள் வழி, சைவ அன்பர்கள் செயல் முயற்சியால் ஆலயம் 1894ம் கண்டு பிடிக்கப்பட்டது. மூன்று குடமுழுக்குகளும் மேல் பெற்றது. இன்று ஆலயம் அழிவுக்கு உள்ளானதாகச் செய்திகள் வினவுகின்றன.

திருஞான சம்பந்தர் திருப்பதிகத்திலேயே கருது நின்ற இடமாவது என சுட்டப் பெற்றது திருக்கேதீச்சரம். சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப் பதிகத்தில்,

"மூவரென இருவரென முக்கண்ணுடை மூர்த்தி" ஆவார் என்று சுட்டப்பெற்ற வழி திருக் கேதீச்சரத்தான்.

மூன்றாவதாக மகாலிங்கத்தான் அமையும் ஆணை அறியப்படுகின்றது. அதனைக் காண்பது எப்போது!

ஸ்ரீந்திக்கலாசாதனை

**பொய்குறளை வெளவ லழுக்கா றிவைநான்கும்**
**ஐயந்திர் காட்சியார் சிந்தியார் - சிந்திப்பின்**
**ஐயம் புகுவித் தருநிரயத் துய்த்திடுந்**
**தெய்வமுஞ் செற்று விடும்.**

*(பொ.உரை)* பொய்யும் குறளையும் பிறர் பொருளைத் தாம் வெளவவேண்டுதலும் காமமும் பிற ராக்கத்தின் கண் பொறாமையும் என இவை நான்கினையும் ஐயந்தீர்ந்த அறிவினையுடையார் நினையார்; நினைப்பாராயின் பிச்சை புகுவித்து நரகத்தின்கண்ணேயும் புகுவிக்கும்; தெய்வமும் கெடுத்துவிடும்.

*ஆசாரக்கோவை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவசித்தாந்தம் பயில்வோம்

# சிவப்பிரகாசம்

[illegible] ஆ. நடராசா

## ஆன்ம தரிசனம்

*தன்னறி வதனால் ஏதும் தனக்கறி வில்லை யேனும்*
*தன்னறி வாக எல்லாம் தனித்தனி பயன ருந்தும்*
*தன்னறி வறியுந் தன்மை தன்னாலே தனைய றிந்தால்*
*தன்னையும் தானே காணும் தானது வாகி நின்றே.* 72

இ-ள்: தன் அறிவு அதனால் - தனது இயற்கை அறிவினால், தனக்கு அறிவு ஏதும் இல்லையேனும் - ஆன்மாவுக்கு அறியப்படுவதொன்றும் இல்லையாயினும், தன் அறிவாக - தன்னுடைய அறிவினால் அறிந்தனுபவிப்பதாகக் கருதி, பயன் எல்லாம் தனித்தனி அருந்தும் - கருவிகள் வழியாக வரும் பயன்கள் எல்லாவற்றையும் ஒவ்வொன்றாக அறிந்து அனுபவிக்கும் தன்னாலே தனை அறிந்தால் - சிவஞானத்தாலே அந்தச் சிவஞானத்தை அறிந்தால் - தானே அந்த ஆன்மாவே, தன்னறிவு அறியும் தன்மை - ஆன்ம அறிவு அறியும் முறையையும், தன்னையும் - ஆன்மாவாகிய தனது இயல்பையும், தான் அது ஆகி நின்றே காணும் - அந்த ஞானமயமாகி நின்றே தரிசிக்கும் எ-று.

பெத்தநிலையில் சிவன் ஆன்மாவுக்குத் தத்துவங்களைக் கூட்டி, அவ்வவற்றால் அறிவு விளக்கிப் போகங்களை அனுபவிக்கச் செய்வன். அப்போகங்களை அனுபவிக்கும்போது, தான் திருவருளின் உபகாரத்தால் அறிந்து அனுபவிப்பதாகக் கருதாது, தானே அறிந்தனுபவிப்பதாகக் கருதும்.

பக்குவ நிலையில் ஆன்மா அருளாலே அருளைத் தரிசித்து, திருவருளின் வண்மையைக் கண்டு, தான் கருவிகளைக் கொண்டறிந்ததென்றும் அக்கருவிகள் மாயாகாரியமான சடங்களென்றும் அவை தனக்கு வேறானவை யென்றும் தனக்கு அறிவித்தது திருவருளென்றும் தான் அறிவிக்க அறியும் இயல்புடையதென்றும் அறியும். இவ்வாறு தன்னறிவு விளங்கக் காண்பது ஆன்மதரிசனம். இது நின்மல சாக்கிரமெனவும் சொல்லப்படும்.

"தன்னாலே தன்னை யறிந்தால்" என்று அவ்விடத்திற் கூறியதனை, "அவனருளாலே அவன்தாள் வணங்கி" என்கிறது மணிவாசகம்.

கருவிகள் சடமென்றும் தானதல்லவென்றும் அறிந்து ஆன்மா தன் செயலற்று அருளோடு கூடி நிற்றல் ஆன்ம தரிசனம் எனப்படும். இது நின்மல சொப்பனம்.

## ஆன்மசுத்தி

*தத்துவ மான வற்றின் தன்மைகள் உணரும் காலை*
*உய்த்துணர்ந் திட உதிப்ப தொளிவளர் ஞான மாகும்*
*அத்தன்மை அறியு மாறும் அகன்றிட அதுவாம் ஆன்மாச்*
*சுத்தமாம் சுத்த ஞானத் தொருமுதல் தோன்றுமன்றே.* 73

இ-ள்: தத்துவம் ஆனவற்றின் தன்மைகள் உணருங்காலை - தத்துவங்களின் தன்மையை அறியும்போது, உய்த்து அறிந்திட உதிப்பது ஒளிவளர் ஞானம் ஆகும் - அவற்றின் இயல்பை ஆராய்ந்தறிய நிலைபெற்று பொருளாகத் தோன்றுவது பிரகாசம் மிக்க சிவஞானமாகும். அத்தன்மை அறியுமாறும் அகன்றிட - அப்படி அறியும் முறையும் விட்டு நீங்க, அது ஆய ஆன்மா சுத்தமாம் - அந்த ஞானமேயாய் ஆன்மாச் சுத்தியடையும், அன்றே சுத்த ஞானத்து ஒருமுதல் தோன்றும் -

[illegible]
[illegible] 408
[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொழுதே அந்த ஞானமயமாகிய ஞானத்துக்கு முதலாகிய ஒப்பற்ற ஞேயம் தோன்றும் என்க.

**உய்த்தறிதல் - ஊகித்தறிதல் - அனுமானித்தல்**
**ஞேயம் - அறியப்படும்பொருள்**

தத்துவங்கள் அசத்தென்றும் தனக்கு அன்னியமானவை என்றும் அறிந்து, அவற்றை விட்டு நீங்காது, மீண்டும் மீண்டும் தற்போத முனைப்போடு அத்தத்துவங்களைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபடுவோமாயின், அச்சுட்டுணர்வாகிய பிரபஞ்சப்பற்று, ஞானத்தைச் சார்ந்து ஞானமேயாகி ஆன்மா சுத்தியடைவதற்குத் தடையாயிருக்கும். ஆன்மா ஞானத்தைச்சார்ந்து ஞானமேயாய்ச் சுத்தியடைவதற்கு, தற்போத முனைப்போடுகூடிய சுட்டுணர்வும் பாசப்பற்றும் முற்றாக நீங்கவேண்டும். இதைக் குறிப்பிடுவதற்காக "அத்தன்மை" அறிவு மாறும் அகன்றிட அதுவாய் ஆன்மா சுத்தமாம், என்றார்.

சுட்டறிவினால் அறியப்படும் பிரபஞ்சப்பற்று முற்றாக நீங்க, ஆன்மா தன்செயலொன்று மின்றி, தற்போதம் தோன்றாது, திருவருளையே தாரகமாகக் கொண்டு அவ்வருளில் அடங்கி நிற்றல் ஆன்ம சுத்தியாகும். இது நின்மல சுத்தி யெனப்படும்.

ஆன்மாவின் அறிவு இச்சை, செயல்கள் தொழிற்படாதிருக்க அவ்வான்மாவோடு கூடிய அருள் சுத்த ஞானம் எனப்படும். அந்த ஞானமே ஞானமாய் ஆன்மாச் சுத்தியடைய, அப்பொழுது அந்த ஞானத்துக்கு முதலாகிய ஞேயம் தோன்றும்.

***உணர்தரும் உணர்வு மன்றி அதன் முதல் உள்ள தென்றிங்***
***கணைவதென் எனில்உன் ஞானம் அருளெனும் அதுவே யன்றி***
***நிறைவொளி முதல தன்றி நின்றிடா நிமல னாகும்***
***இறையவன் முதல வன்றான் இலங்கருள் சத்தி யாமே. 74***

இனி உணர்தரும் உணர்வும் அன்றி அதன் முதல் உள்ளதென்று இங்கு அணைவது என் எனின் - ஆன்மாவிடத்திற் பொருந்தியிருக்கும் ஞானம் மாத்திரமன்றி அதற்கு முதலாகிய ஞேயமும் உண்டென்று இவ்விடத்துச் சொல்வதென்னை யென்று கேட்பாய். அதுவே அன்றால் அருள் எனும் - அந்த ஞானமே சிவனுடைய அருளென்று சொல்லப்படும். அன்றி - அஃதன்றியும், நிறைவொளி முதலது இன்றி நின்றிடா - நிறைந்த ஒளியானது அதற்கு முதலாகிய சூரியனின்றி நில்லாது, நிமலன் ஆகும் இறையவன் முதல் - நின்மலனாகிய சிவன் முதலாதும், அவன்தன் இலங்கு அருள் சத்தியாமே - அவனிடத்து விளங்கும் அருளே அவனுடைய சத்தியாகும். அதனால் ஞானமாகிய சத்தியும் தனக்கு முதலாகிய சிவனையின்றி நில்லாது என்க.

"அதனால் ஞானமாகிய சத்தியும் தனக்கு முதலாகிய சிவனையின்றி நில்லாது" என்பது வருவித்துரைக்கப்பட்டது.

சிவசங்கிராந்த வாதிகள் ஞானமேயன்றி அதற்கு முதலாய ஞேயம் என்பதொன்றில்லையெனவும் ஞானந்தோன்றிய போதே ஆன்மா அந்த ஞானத்துடன் கூடி ஞானமேயாய் நிற்கு மெனவுங் கூறுவர். அவர்களது கூற்றை மறுத்து "இறையவன் முதலவன்றான் இலங்கருள் சத்தியாமே" என்றார்.

## ஞானமே ஞேயத்தைக் காட்டும்

***சுத்தமாம் சத்தி ஞானச் சுடராகும் சிவமொழிந்தச்***
***சத்திதான் இன்றாம் முன்னைத் தகவின மலங்கள் வாட்டி***
***அத்தனை அறநும் எங்கும் அடைத்திடும் இருள் அகற்றி***
***வைத்திடும் இரவி காட்டும் வளரொளி போலும் ஞேயத்தே. 75***

[illegible] the learned. [illegible]

இ-ள்: சத்துமாம் சத்தி ஞானச் சுடருமாம் - நின்மலமாகிய அந்தச் சத்தி ஞானப்பிரகாசமாய் இருக்கும், அச்சத்தி சிவம் ஒழிந்து இன்றாம் - அந்தச் சத்தி சிவத்தை விட்டு நீங்கி நிற்குமாயின் அது எல்லாம் அடைந்திடும் இருள் அகற்றி எவற்றிலும் இரவி காட்டும் வளர் ஒளி போல் - எவ்விடத்திலும் செறிந்திருக்கின்ற இருளை நீக்கி எவற்றிலும் சூரியனைக் காட்டும் மிகுந்த சூரியப்பிரகாசத்தைப் போல, முன்னை அகன்றிடா மலங்கள் வாட்டி - அனாதியே ஆன்மாவைப் பற்றியிருக்கும் இருண்ட மலங்களை ஒழித்து, மகிழ்ந்தே அத்துவா அறு ஞும் மகிழ்ச்சியோடு சிவத்தைக் காட்டும் எ-று.

இச் செய்யுளில் வரும் உவமான உவமேயங்கள்

| உவமானம் | உவமேயம் |
|---|---|
| சூரியன் | சிவன் |
| சூரிய ஒளி | சத்தி |
| இருள் | மலம் |

சூரியனை விட்டு நீங்காத சூரியவொளி இருளை நீக்கிச் சூரியனைக் காட்டும். அதுபோல சிவத்தைப் பிரிந்து நிற்காத ஞானப்பிரகாசமான சிவசத்தி, மலத்தை நீக்கிச் சிவத்தைக் காட்டும் என்பது கருத்து.

## ஆன்மசத்தி

*புகலரும் அசத்தர் தம்பால் பொருந்திய அலகை போல*
*அகிலமும் உணரும் சீவன் அருளுயிர் மேவ லாலே*
*சகலமும் நிகழ வேண்டும் தலைவன் ஐந்தொழிலும் தானே*
*இகலற இயற்றல் வேண்டும் என்றது நன்றி யன்றே* 76

இ-ள்: அசத்தர் தம்பால் புகலரும் அலகை பொருந்திய போல் - பைத்தியகாரரிடத்திலே சொல்லுதற்கரிய வலியுடைய பேய் பொருந்தினாற் போல, அகிலமும் உணரும் சீவன் அருள் உயிர் மேவலாலே - எல்லாம் அறிபவராகிய சிவபெருமானுடைய அருள் ஆன்மாவைப் பொருந்துதலால், சகலமும் நிகழ வேண்டும் - சிவனுக்குரிய எண் குணங்களும் ஆன்மாவிடத்தில் விளங்க வேண்டும், தலைவன் ஐந்தொழிலும் தானே இகலற இயற்றல் வேண்டும் - முதல்வன் செய்யும் ஐந்தொழில்களையும் ஆன்மா மாறுபாடின்றிச் செய்தல் வேண்டும், என்றது நன்றி அன்றே என்று சொன்னது நன்மையுடைத்தன்று எ-று.

பேயால் பிடிக்கப்பட்டவனிடத்திலே அப்பேயின் குணங்களும் செயலும் விளங்குவது போல, சிவனருள் பதிந்த ஆன்மாவிடத்திலே சிவனுக்குரிய குணமும் செயலும் விளங்குமென்பர் - சங்கமவாதிகள். அவர் கொள்கையை மறுத்து "சகலமும் நிகழ வேண்டும் தலைவன் ஐந்தொழிலுந் தானே இகலற இயற்றல் வேண்டும் என்றது நன்றி இன்றே" என்றார்.

எண் குணங்கள் தன்வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினின்று நீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை.

மிகுதி அடுத்த இதழில் தொடரும் .....

[illegible] 401

# அன்பழிப்பு - அன்பளிப்பு

முருகவே பரமநாதன்

அன்பு + அழிப்பு = அன்பழிப்பு. அன்பு + அளிப்பு = அன்பளிப்பு

காதல், நேயம், நேசம், நார், ஈரம், வாரம் என்னும் சொற்கள் அன்பையே குறிக்கின்றன. இப்பிரயோகங்களுடன் பாசம், பட்சம், பிரியம் முதலியனவும் அன்பை வெளிப்படுத்தும் பிரயோகங்களே. அன்பையே சுட்டி நின்ற காதல் என்னும் பதம் இன்று ஆங்கிலத்தில் LOVE என்று பேசப்படும் சொல்லுக்கீடாகப் பயன்படுத்தப்படுகிறது. இது ஆண், பெண் இணை விழைச்சின் கருதுகோளை அடிப்படையாகக் கொண்டது. எனினும் அன்பின் வெளிப்பாட்டைப் பகிர்ந்திடும் பதமே காதல். இக்காதல் உடல் உறவன்று. இரு சம உள்ளங்களின் இணைப்பே காதலாய் மலர்கிறது. ஒட்டுமொத்தமாக அன்புடை நெஞ்சங்கள் ஒன்று கலந்து இல்லறமாம் இயலறம் காக்க அது ஒரு குறிப்புணர்வாகும். செம்புலப் பெயல் நீர் போல அன்புடை நெஞ்சம் ஒன்று கலந்தனவே என்றார் சங்கக் காலக் கவிஞர். ஒரு இன்ப உணர்வான கிளுகிளுப்பு காதலால் வரும் மெய்ப்பாடெனலாம். மனிதக் காதலையும் விஞ்சி தெய்வீகக் காதலைப் பெரும் பேரின்பம் எனலாம். உடல் உறவு சிற்றின்பம். சின்னேரப் பயனுடையது. உயிரோடிணைந்த பேரின்பம் என்றுமழியா பேரின்பமளிப்பது. சிற்றின்பம் தற்காலிகமானது. பிடைபயப்பது. முடிவாகுது. பேரின்பம் என்றும் அழியா இறைவனை அனுபவிப்பது. முடிவில்லாதது. தூயது. எவ்வோ அன்பின் பரிமாணம் வித்தகைப்பது என்பதை இதனால் உய்த்துணரலாம். மனிதம் கடந்து பிறவுயிரின் சேர்க்கையும் காதல் மயமானது. இரு சிட்டுக்கள், இரு வானம்பாடிகள், இரு அன்றில்கள் இசைந்த தரிசனம். தாயும் சேயும், பசுவும் கன்றும், பிள்ளைப் பிச்சிகளாய்த் திகழ்கின்றன. அன்பின் விளைவே இவ்வுலகம். ஆனால் இன்று அன்பு வரண்டு வருவதைக் காணலாம். அருக்கமாக மனிதத்தைப் பொறுத்தவரை மனிதம், மானுடம், மனித நேயம், மாதற மரணிக்க வாழ்கின்றது. இதையே மனித நேயம் பட்டுப் போச்சு, மனுஷ வாழ்வு கெட்டுப் போச்சு எனக் கவிஞன் வர்ணிக்கிறான். இன்று நாட்டம் இல்லாத மனிதத்தனம் தோன்றப்படுகிறது. காதலை இருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம் என ஆண், பெண் உறவின் மகத்துவம் பற்றிப் பேசியவர் ஔவையார். காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி, ஒருவர் தம்மை நன்னெறிக்குய்ப்பது நாதன் நாமம் நமச்சிவாயவே என்ற சம்பந்தப்பிள்ளையும், நாயன் முன்பாகவே காதல் செய்யுமின் எனப் பெருந்துறைப் பிள்ளையும் திருவாய் மலர்ந்துள்ளனர். அன்பை ஒரு மலராகவே மனிதம் போற்றியது. இணை பிரியா இதயங்களின் (உள்ளங்களின்) நெகிழ்ச்சியே அன்பு. இது ஒரு பண்பு, குணம், மனிதப் பண்பின் வெளிப்பாடு. மட்டுமல்லாமல் அதை மிக சொத்துமாம். மனிதப் பண்பின் முதுசொம் அன்புதான். இந்தப் பண்பு நிறைந்து வழிபவன் மனிதன். அன்புடையவன் அன்பன். ஆண், பெண், குழந்தை, குமரன், முதியோர், இளையோர் யாவருக்கும் இது பொது. பிணித்து வைத்திருப்பதும் இதுதான். அன்பு ஒரு அறுக்க முடியாத வரம்பிலாக் கயிறு. சமுதாயத்தையே அன்புக்கயிறு ஒன்றாகக் கட்டி வைத்திருக்கும். இது அறுந்தால் மனிதம் மூன்று கணமே சின்னாபின்னமாகும். அன்பென்றாற் பிடிபடும் அன்பர்நிறை மாலை இறைவன்.

அன்பு ஒரு குணப் பெயர். அழிப்பு, அளிப்பு தொழிற் பெயர். அன்பு கெட்டால் மனிதம் கெடும். அழிப்பு இதில் வரும் முகரம் மல்லிழகரம். அழிப்பு - இல்லாமற் செய்தல், ஒழித்தல், சங்காரம் என அர்த்தப்படும். இறைவனது ஐந் தொழில்களில் ஒன்று அழித்தல். அளித்தல் பொருள் ளகரம் வரும் சொல். அளித்தல் என்றால் கொடுத்தல் என்றே கருத்து முகிழ்கிறது. அன்பை இல்லாமற் செய்கிறது. கொடுக்கிறது. பின்னது அன்பின் பரிசாக ஒரு பொருளை நினைவாக வழங்குவதை விளக்குகிறது. இது அன்பின் பரிசு. நினைவான சின்னம். இறைவன் வழங்குவது முத்திப்பரிசு. இரு உள்ளங்களின் பிரிக்க முடியாப் பிணைப்பை வெளிப்படுத்துவதே அன்பளிப்பு. முன்னையது அன்புச் சங்கிலியையே அறுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்து விடுகிறது. ஒன்றோடொன்று முரண்பட்டு வேறுபட்டு விடுகிறது அன்புநெறி. கூடிய பின் முரண்பாடுகளாக அன்பு அழிக்கப்பட்டு வம்பு பெருகிறது. இது மனித வர்க்கத்திலேயே வலுவடைந்துள்ளது. இந்நிலை நீடிப்பின் மனிதரும் மாக்களும் வேறுபாடின்றி அழியும் அபாயம் தோன்றுவானது. ஆக்கம் பெற்ற சமூகமும் கூட அன்பு வழியை விட்டு வன்பு வழியில் நடம் பதிக்கப் பார்க்கிறது. இந்த வன்முறைக் கலாசாரம் வளராமல் கொடிய பண்பு தலைதூக்காமல் காக்க வேண்டியது சமூகத்தின் பொறுப்பாகும். இந்நெறியிலே சைவசமயம், சமயாசாரியர்கள் ஆலயங்கள் மட்டுமன்றி சைவர்களாகும் கலாச்சாரம் சிறந்த எண்ணங்களோடு தொழிற்பட வேண்டும். இது மனிதத்தைப் பலி கொடுக்கும் பாதைக்கு இட்டுச்செல்லும். வன்முறை வளராமல் அன்பு வழி சமைத்த சமயங்களில் சைவமும் ஒன்று. சைவத்தின் இருப்பிடமான ஆலயங்கள் இன்று அன்பைத் தொலைத்து பொருளின் மையமே தலையாயதாகக் கொண்டு தொழிற்படுகின்றன. எனவே இனி வரும் பகுதிகளில் சிந்திப்போம்.

அன்பு உலகத்துக்கே பொதுவானது. உயிரினங்கட்கே சிறப்பானது. அன்பின் களம் காத்திரம் பற்றி பாரதியார் என்ன சொல்கிறார் என்பதைப் முதற்கண் ஆராய்வோம்.

அன்பின் வழியது உயிர் நிலையென வள்ளுவர் காட்டிய வாழ்வமைதியை எண்ணி எண்ணி பாரதியார் அன்பின் பெருமையைத் தன் பாடல்களிலே நிறையப் பொழிந்துள்ளார்.

*உயிர்கள் இடத்து அன்பு வேணும்*
*அன்பு மிகுந்த தெய்வம் உண்டு*

பல்வகைப்பாட்டு 16, 9

*அன்பென்று கொட்டு முரசே* முரசு 20

எல்லா உயிர்க்கும் அன்புடையோர் போல் எங்கும் இருக்கவும் தெய்வ அருட்கருணை செய்யும் பராபரமே என்று தாயுமானவர் அன்பின் விளைவை அருளை வாழ்வு வழி பொழிந்தார். இயேசு, நபி நாயகம், புத்தர் காட்டும் அன்பு வழி உயர்வானது. வள்ளுவர் அருளென்னும் அன்பின் குழவியென அன்பு பெற்ற பிள்ளைதான் அருள் என்று விளக்கினார். எனவே நாமெல்லாம் அன்பு செய்து வாழ வேண்டும் என்பதைப் பாரதி அழுத்திச் சொன்னார்.

இந்தப் புவிதனில் வாழு மரங்களும்
இன்ப நறுமலர்ப் பூஞ் செடிக் கூட்டமும்
அந்த மரங்களைச் சூழ்ந்த கொடிகளும்
ஔடத மூலிகை பூண்டுபுல் யாவையும்
எந்தத் தொழில் செய்து வாழ்வன வோ?

*மானுடர் உழாவிடினும் வித்து நடாவிடினும்*
*வரம்புகட்டாவிடினும் அன்றி நீர் பாய்ச்சாவிடினும்*
*வானுலகு நீர் தருமேல் மண்மீது மரங்கள்*
*வகைவகையா நெற்கள் புற்கள் மலிந்திருக்கு மன்றோ?*
*யானெதற்கும் அஞ்சுகிலேன், மானுடரே, நீவிர்*
*என்மதத்தைக் கைக்கொண்மின்; பாடுபடல் வேண்டா,*
*ஊனுடலை வருத்தாதீர், உணவியற்கை கொடுக்கும்*
*உங்களுக்குத் தொழிலிங்கே அன்பு செய்தல் கண்டீர்.*

பாரதியார் பாடல் அன்பு செய்தல் 1,2

எனக்குத் தொழில் கவிதை எனப் பாடியவர் உங்களுக்குத் தொழிலிங்கே அன்பு செய்தல் கண்டீர் என அறைகூவி விளித்துப் பேசுகின்றார். அன்பு செய்தலே எனில் இந்த அன்பை விட்டு மனிதன் வன்முறையிலே தன்னை ஈடுபடுத்தி மனிதத்தைத் தன் முயற்சியாலும் தன்னினத்தை அழித்தும் தான் கண்ட மிச்சம். இந்தக் கொடுமையான நாகரீகம் ஒழிய அன்பு தன்னிறைவான வழி என்பதை இன்னும் மனிதன் உணரவில்லை. எனின் மிருகத்திலும் நாம் கேவலமானவர்களே. கொள்ளை கொலை, கற்பழிப்பு, வழிப்பறி, ஆட்கடத்தல், வன்முறைக் கொழுப்பு, பிரேதச்சத்தனம், விடுவாசகலை அபகரித்தல், இனப்பகை, போட்டி, பொறாமை, திட்டமிட்ட செயல் போன்ற அடாவடித்தனங்கள் எல்லாம் நெஞ்சில் ஈரம் இல்லாமையால் நிகழும் கொடூரங்களே. அன்பை சேக்கிழார் ஈரஅன்பு என்பார். மகோன்னதமான பண்பு அது. மரம் பட்டுப் போனதா இல்லையா என்பதை அதன் பட்டையைச் சுரண்டிப்பார்த்து அறிகிறோம். மனிதனை உரசிப் பார்ப்பது அன்பைக் கொண்டே தான்.

வள்ளுவர் அன்புடைமை பற்றி ஒரு அதிகாரமே அமைத்துள்ளார். இதற்கு விளக்கம் எழுதிய பரிமேலழகர் "இல்லறம் இனிது நடத்தலும், பிற உயிர்கள் மேல் அருள் பிறத்தலும் அன்பின் பயன்களின் இது வேண்டப்பட்டது. வாழ்க்கைத் துணை மேல் அன்பில் வழி இல்லறம் இனிது நடவாமை" அறவோர்க்களித்தலும் அந்தணர் ஓம்பலுந் துறவோர்க் கெதிர்தலுந் தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதனாலும் அருளென்னும் அன்பீன் குழவி என்பதனாலும் அறியக் கிடக்கின்றார். எனவே அன்பிற்கு அடைக்கும் தாழ் இல்லை. ஆனால் நம்மேல் அன்பு வைத்தாரின் துன்பத்தைக் கண்டால், அன்புடையவர்களின் கண்ணீரே அவர்களது உள்ளன்பை வெளிப்படுத் தும் என்கிறது வள்ளுவர் பொய்யாமொழி.

*அன்பிற்கும் உண்டோ அடைக்குந் தாழ் ஆர்வலர் புன்கணீர் பூசல் தரும்*

அன்பிலாதவர்கள் சுயநலம் உடையவர் களாய் இருப்பர். இன்புடையவர் பிறருக்குத் தம் என்பையும் கொடுப்பர்.

*அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு*

இவ்வாறு அன்பின் சிறப்பு பல்வகையால் மேம்பட்டது என்பதைக் குறள் மூலியம் இடித்துக் கூறும் குறட்பாக்கள் அனேகமே ஓரம் போகின்றன. மனத்தில் அன்பில்லாத உயிர் இல்வாழ்க்கையோடு கூடி வாழுதல் வரண்ட நிலத்தில் வற்றிப்போன மரம் தளிர்த்தது போன்றது. பட்ட மரத்தில் பசுமை இருக்காது. தளிர் எறியவும் மாட்டாது. எனவே இன்றைய நல்லற மாய்த்திடும் அன்பு நல்ல பாசனமாம்.

*அன்பகத்தில்லா உயிர் வாழ்க்கை வன்பாற்கண் வற்றல் மரந் தளிர்த்தற்று*

இந்த உடம்பு வெறும் போர்வையாக அமை யாமல் அன்பை முதன்மையாகக் கொண்ட தென்பதை நாமுணர்ந்து நடத்தல் வேண்டும்.

*அன்பின் வழியது உயிர் நிலை அஃதிலார்க்கு என்பு தோல் போர்த்த உடம்பு*

அன்பை விட்டால் வாழ்வு செழிக்காது. பசுமை பூக்காது. எனவே சான்றாண்மைக்கு தூண்கள் ஐந்து. அதிலொன்று அன்பு.

அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு ஐந்து சால்பூன்றிய தூண்.

திவ்விய திருமறைகள் சர்வம் அன்பு மயம் எனப் பேசுகிறது. இறைவனையே அன்புமயம் கண்டவர் தாயுமானவர். மணிவாசகர் அன்பை அழுத்தமாக மிகு அன்பு, தீர்ந்த அன்பு எனப் பாடு கின்றார்.

*போற்றி எல்லாம் மூண்டும் புகழ்ந்தும் நின்று*
*ஆற்றல் மிக்கதுன் பாலமைக் கின்றிலேன்*
*ஊற்று வந்தெதிர் தாமரைத் தாளுறும்*
*கூற்று மன்னதோர் கொள்கையென் கொள்கையே*

*தீர்ந்த அன்பாய அன்பர்க்கு அவரினும் அன்ப போற்றி*
*பேர்ந்தும் என் பொய்ம்மை ஆட்கொண்டருளும் பெருமை போற்றி*
*வார்ந்த நஞ்சயின்று வானோர்க்கமுதம் வள்ளல் போற்றி*
*ஆர்ந்த நின் பாதம் நாயேற்கு அருளிட வேண்டும் போற்றி*

இந் நிலையில் குதிரைச் சவாரியாக விஞ்ஞானம் வளர்ந்தது. Man Power, Time Power பற்றிய ஆராய்ச்சிகள் இன்றைய கண்டுபிடிப்புகள் இப்படி விஞ்ஞானத்தோடு ஒட்டி உறவாடுவதும் அன்பு என்னும் பண்பு ஆற்றல் மிகு அன்பைத் தொட்டுக் காட்டுகிறது. இவ்வாற்றல் தெய்வத் தையே நம்மோடு பேச வைக்கிறது. இறைவனை நம் பக்கமாக அழைக்கிறது. ஒரு குழந்தையின் மழலை மொழி அம்மா என்றழைக்கும் அன்பு மொழி அன்னையின் மனதையே கிள்ளி விடுகிறது. அன்புக்கு எல்லையே இல்லை. ஆற்றல் மிகு அன்புடைமை இறைவனையே இறங்க வைக்கிறது. தீர்ந்த அன்பு முதிர்ந்த முற்றிய கனிந்த அன்பைத் தேடி காட்டும் பிரயோகம். சேக்கிழார் இறை ஏறு போத இன்ப அன்பு என வர்ணிக்கிறார். அப்படியான கண்ணப்பர் நிலையைத் தன்னோடு ஒப்பிட்டு மாணிக்கவாசகர் பாடிய பாடல் ஒன்று அன்பை உரைத்துக் காட்டுகிறது.

*கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்*
*என்னப்பன் என்னொப்பில் என்னையும் ஆட்கொண்டருளி*
*வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான் கருணைச்*
*சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ*

இவ்வண்ணம் சமுதாய இயலிலும், உயிரின இயலிலும், தெய்வீக நெறியிலும் கரந்து நிற்கும் அன்பை மனிதம் விழுந்தால் என்னாகும் என்பதை இதயமுள்ள ஒவ்வொருவரும் சிந்தித்து அன்பு செய்வோம். அரக்கர்களிலிருந்து மனிதத்தை மீட்டு அன்பு நிரப்பப்பட்ட அனைவரும் ஒரு குடையாய் வாழ ஒன்று கூடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவாலயங்களில் துவாரபாலகர்கள்

ஏன். நாராயணசுவாமி
(திருவாவடுதுறை ஆதீனம் ஸ்தபதி மார்)

மனிதர்களுக்கு வீடும், மன்னருக்கு அரண்மனையும், துறவிகளுக்கும், தபசிகளுக்கும், போகிகளுக்கும், சித்தர்களுக்கும் மடங்களும் இருப்பது போன்று, தெய்வத் திருமேனிகள் விளங்கப்பெறுவதும் இத்திருக் கோயில்கள் அல்லது ஆலயம் எனவும் கூறுவர். கோ என்றால் அரசன் (இறைவன்), இல்-இருப்பிடம். ஆக அரசனும் இறைவனும் ஒரே பொருளைப் பயப்பவை என அறிகின்றார்கள்.

ஆதி காலத்தில் மனிதனின் சிந்தனாசக்தியின் விளைவால் மரங்களின் அடியில் இறைவன் இருப்பதாக உணர்ந்து மரங்களையே வழிபட்டான். இந்நிலை தொடர்ந்தும் விரிந்தும் அடியார் செல்வமாக நின்று விளங்கும் பொழுது இறைவனுக்கு கருவறைகளை அமைக்கத் தொடங்கினான்.

வீடுகள், அரண்மனைகள், மடங்கள் கட்டுமானத்தில் பல பகுதிகள் (இடங்கள்) இருப்பது போல இறைவனுக்கு எழுப்பப்படும் ஆலயங்களில் கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம், முகமண்டபம், நந்தி, பலிபீடம், கொடிமரம், கோபுர நுழைவாயில் போன்ற பல பகுதிகளைத் தோற்றுவித்தான். பரிவாரத் தெய்வங்கட்குத் தனித்தனிச் சிறு கோயில்கள், நவக்கிரக சன்னிதி என்று விரிவடைந்தன. அரசனுடைய அரண்மனை வாசல் (வாயிலைக்) காத்து நிற்பவர் வாயிற்காவலர் என்றும், ஆலயத்தின் நுழைவாயிலைக் காப்பவர் துவாரபாலகர் என்றும் (துவாரம்-வாயில்) கூறுவர்.

அவ்வகையில் ஆலயங்களில் விளங்கும், கணபதி, முருகன், சிவன், அம்பிகை, சூரியன், சண்டர், திருமால், ஐயனார் முதலானப் பல திருமேனிகளுக்கு தனித்தனி துவார பாலகர்கள் உண்டு. இவர்கள் ஆகமக் கருத்துக்கு ஏற்றாற்போல், ஆன்மாக்கள் கடைப்பிடிக்க வேண்டிய நெறியினையும் உணர்த்தும் பொருட்டு பல வடிவங்களில் காணப்படுகின்றனர். இவர்களின் பல நிலைகளை இங்குக் காண்போம்.

### டிண்டிக் துவாரபாலகர் உருவம்

*"ரக்தவர்ணம் த்விநேத்ரஞ்ச நாகயக்ஞோப வீதினம்!*
*தம்ஷ்ட்ராஸ்யம் பீதவஸ்த்ரம் ஏகவஸ்த்ரம் த்விபாஹுகம்!!*
*விஸ்மயம் ஹஸ்த ஸம்யுக்தம் தண்டாயுத ஸமந்விதம்!!*
*ஸவ்ய பாதஸ்திதம் வீரம் டிண்டிம் தம் ப்ரணமாம்யஹம்!!*

சிவந்த திருமேனியுடையவரும், இரண்டு கண்களையும், இரண்டு கைகளையுமுடையவரும், சர்ப்பத்தை பூணூலாக அணிந்து கொண்டிருப்பவரும், கோரைப் பற்களை உடையவரும், ஒரே ஆடையை உடுத்தி இருப்பவரும், ஆச்சரியத்தைக் குறிக்கும் வண்ணம் ஆள்காட்டி விரலை மட்டும் நீட்டியும் மற்ற விரல்களை மடக்கியவாறு இருக்குமாறு கையை வைத்திருப்பவரும், தண்டத்தை ஆயுதமாகக் கொண்டவரும், வலது முழங்காலை மடக்கி வைத்துக் கொண்டு, இடது காலை ஊன்றிக் கொண்டு நிற்பவரும், பராக்ரமசாலியுமான "டிண்டி" என்னும் துவாரபாலகரை அமைத்து வணங்குதல் வேண்டும்.

### முண்டிக் துவாரபாலகர் உருவம்:

*"முண்டினம் த்விநேத்ரஞ்ச த்வி புஜஞ்ச த்விநேத்ரகம்!*
*தண்டாயுத தரம் ஸௌம்யம் நாகாபரண பூஷிதம்!!*
*விஸ்மயம் ஹஸ்த ஸம்யுக்தம் பூதி ருத்ராக்ஷ தாரிணம்!*
*முண்டினம் துவாரபாலம் தம் தக்ஷிணாங்க்ரிஸ்திதம் பஜே!"*

கேசம் இல்லா சிரசையுடையவரும், இரண்டு கண்களையும், இரண்டு கைகளையுமுடையவரும், மகிழ்ச்சியுடையவரும், தண்டத்தை ஆயுதமாகக் கொண்டவரும் அழகாக இருப்பவரும், பாம்பை ஆபரணமாகக் கொண்டவரும், விபூதியையும், உருத்திராக்க மாலைகளையும் தரித்திருப்பவரும், ஆச்சரியத்தைக் குறிக்கும் வண்ணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆள்காட்டி விரலை மட்டும் நீட்டியும், மற்ற விரல்களை மடக்கி இருக்குமாறு கையை வைத்திருப்பவரும், இடது முழங்காலை மடக்கி வைத்துக்கொண்டு, வலதுகாலை ஊன்றிக் கொண்டு நிற்பவருமான "முண்டி" என்னும் துவாரபாலகரை அமைத்து வணங்க வேண்டும்.

*அம்பிகையின் தேவாலயத்தில் வாம பாகத்தில் யோகினீதுவாரசக்தி உருவம்:*


*"சிந்தூரவர்ணாம் ஜடிலாம் த்விநேத்ராம் பத்மபீடகாம்!*
*திருத ஆவளி கேடாம் தாம் குஞ்சிதாங்க்ரி ஸரோருகாம்!!*
*ஸர்வாலங்கார ஸம்யுக்தாம் த்வாரசக்த்யாக்ய யோகினீம்!*
*தேவி மந்திர வாமாந்த நிலயாம் யோகினீம் பஜே!!"*

சிந்தூரம் போன்ற சிவந்த மேனியுடையவளும், ஜடையையுடையவளும் பத்மபீடத்தில் இருப்பவளும், சூலம், சக்தி, கேடயம் இவைகளைக் கைகளில் வைத்திருப்பவளும், கொஞ்சம் வளைந்திருக்கும் படியான நிலையில் இருக்கின்ற இடது முழங்காலையுடையவளும், தாமரை மலர் போன்ற பாதங்களையுடையவளாயும் ஆபரணங்கள் நன்கு அலங்கரிக்கப்பட்டவளாயும், அம்பிகையின் திருக்கோயிலின் வாசற்படிக்கு இடதுபுறம் இருப்பவளுமான "யோகினி" துவாரசக்தி அமைந்து விளங்குவாள்.

*அம்பிகையின் தேவாலயத்தின் தெட்சிண பாகத்தில் சோபினீ துவாரசக்தி உருவம்:*

*"கிரீடினீம் த்விநேத்ராம் தாம் கர்ணாபரண பூஷிதாம்!*
*தர்ஜனீம் சபாமனா மிஷத் குஞ்சிதாங்க்ரி ஸரோருஹாம்!!*
*பத்மாஸநஸ்திதாம் திவ்யாங்கீம் ஸர்வாலங்கார ஸம்யுதாம்!*
*தேவீ மந்திர தக்ஷாசா த்வாரசக்த்யாக்ய சோபினீம்!!"*

கிரீடமணிந்திருப்பவளும், இரண்டு கண்களையுடையவளும், பத்திரை என்னும் காதணிகளால் அலங்கரிக்கப்பட்டவளும், வில்லைக் கையில் ஏந்தியிருப்பவளும், கருமை நிறம் கொண்டவளும், சற்று வளைந்திருக்கின்ற வலது முழங்காலை உடையவளும், தாமரை மலர் போன்ற பாதங்



களையுடையவளாயும், பத்மாசனத்தில் இருப்பவளும், அழகான சரீரத்தையுடையவளும், நன்கு அலங்கரிக்கப்பட்டவளும், அம்பிகையின் திருக்கோயில் வாயிலின் தெற்குப் பக்கமிருக்கின்ற "சோபினி" என்ற துவாரசக்தி அமைந்து விளங்குதல் வேண்டும்.

*அம்பிகை ஆலயத்தின் இடதுபுறத்தில் விளங்கும் "ஜயா" துவாரசக்தி உருவம்:*

*"ரக்த வர்ணாம் த்விநயநாம் ஸ பத்மாம் பீடவிக்ரஹாம்!*
*கிஞ்சித் குஞ்சித வாமாங்க்ரி ருஜூஸ்த்ததக்ஷிணாங்க்ரிகாம்!*
*ஸவ்ய ஹஸ்தத்ருத ஆலம் தாம் தக்ஷ ஹஸ்தாத்த கேடகாம்!*
*ஸர்வாபரண ஸம்யுக்தாம் ஜயாம் ஸவ்யேஸ்திதாம் பஜே!!"*

சிவந்த மேனியையுடையவளும், இரண்டு கண்களையுடையவளாயும், தாமரை மலரையுடையவளும், பயங்கரமான சரீரத்தையுடையவளும், சற்று வளைந்திருக்கின்ற இடது முழங்காலையுடையவளாகவும், நேராக அமைந்த வலது காலையுடையவளும், நின்று கொண்டிருப்பவள் இவளது இடதுகரத்தில் சூலமும், வலக்கரத்தில் கேடயமும் காணப்படும். சர்வாபரணங்களைச் சூடிய இவளை இடப்பக்கத்தில் அமைத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கே ஆலயத்தின் வலது புறத்தில் விளங்கும் "விஜயா" துவாரசக்தி உருவம்:

"சியாமாங்கம் உக்ர தம்ஷ்ட்ராம்ச கிரீட மகுடாஞ் சிதாம்!
கட்க கேடக ஹஸ்தாம் தாம் ஸர்வாபரண பூஷிதாம்!
ரக்தாஞ்சித தராமம்ப்ரிம் பூஸ்ந்தவாமாங்கிகாம் சுபாம்!
தக்ஷத்வார ஸ்திதாம் தேவ்யா: மந்திர விஜயாம் பஜே!!"

கருமை நிறங்கொண்டவளும், கோரைப் பற்களை உடையவளும், கிரீட மகுடத்தைத் தரித்திருப்பவளும், கட்கம், கேடயம், இவைகளைக் கைகளில் வைத்திருப்பவளும், ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டவளும், சற்று வளைந்து வைத்திருக்கின்ற வலது பாதத்தை உடையவளும், நன்மையைச் செய்பவளுமான "விஜயாவை" வலது பக்கத்தில் அமைத்தல் வேண்டும்.

வலது புறமுள்ள துவார உருவமைதி:


"கனக ரசித சோபி சேட தண்டேன சதுசேஷ
ததிதர கரயோர் தீக்ஷ்ண கட்க: சதா ச!
த்ருதகப கடிசூத்ரா தக்ஷபாதஸ்திதா ச
கனகமணி விபூஷா குஞ்சிதோ வாம பாதஸ்ச்சு!!"

சுவர்ணத்தினால் செய்யப்பட்டதும், பிரகாசிக்கின்றதுமான கதி, தண்டம் இவைகளை வலது கைகளிலும், கட்கம், கதை இவைகளை இடது கைகளில் வைத்திருப்பவளும், இடுப்பில் அழகான கடிசூத்திரத்தைப் (ஒட்டியாணம்) கொண்டிருப்பவளும், இடது காலை சிறிது மடக்கியும், வலது காலை ஊன்றிக் கொண்டும் நிற்பவளும், சுவர்ண மணிகளான மாலையை அணிந்திருப்பவளுமான துவாரசக்தியை வலதுபுறம் அமைத்தல் வேண்டும்.

இடதுபுறமுள்ள துவாரசக்தி உருவமைதி:

"கனகரசித சோபே தண்டேன சவாமே
ததிதர கரயோ: தீக்ஷ்ண கட்க: சதா ச!
த்ருதகபகடி சூத்ரா வாமபாதஸ்திதா ச
கனக மணி விபூஷா குஞ்சிதோ தக்ஷிணாங்க்ரி!!"

சுவர்ணத்தினால் செய்யப்பட்டதும், பிரகாசிக்கின்றதுமான கதி, தண்டம் இவைகளை இடது கைகளிலும், கூர்மையான கட்கத்தையும், கதையையும் கொண்டவளும், இடுப்பில் அழகான கடிசூத்திரத்தையுடையவளும், இடது காலைச் சிறிது மடக்கியும், வலது காலை ஊன்றிக் கொண்டும் நிற்பவளும், சுவர்ண மணிகளான மாலையை அணிந்திருப்பவளுமான துவாரசக்தியை இடது புறம் அமைத்தல் வேண்டும்.





---

12 பக்கத் தொடர்ச்சி

ஆனால் மீண்டும், மீண்டும் இப்படி வராமல் பார்க்க வேண்டும்" மெளனமாக டாக்டர் கூறினார். "டாக்டர் நாங்கள் என்ன செய்யவேண்டும், சொல்லுங்கோ" பார்வதியின் தமக்கை கேட்டாள்.

"அம்மா அவர் மனதை அமைதியாக வைத்திருக்க வேண்டும். தேவையில்லாமல் கோபிப்பது, பிறருடன் தர்க்கம் செய்வது, உரக்கக் கத்திப் பேசுவது எல்லாம் மீண்டும் மீண்டும் இரத்த அழுத்தத்தைக் கூட்டும். மனதை அமைதியாக வைத்திருக்க வேண்டும். நற்பழக்கம், பிரார்த்தனை, தியானம் என்பவற்றில் ஈடுபடுதல் வேண்டும், சினம் என்பவற்றைத் தவிர்க்கவேண்டும்" டாக்டர் உண்மையான அக்கறையுடன் நீண்ட அறிவுரையைச் சொல்லிக்கொண்டு சென்றார். செய்வதறியாது கமலம் பக்கத்தில் இருந்து கண்ணீர் வடிய தலைகுனிந்து நின்றாள்.

கண்விழித்த உருத்திரமூர்த்தி டாக்டர் வார்த்தைகள் காதில் விழுந்திருக்க வேண்டும். தனது முன்கோபமும், சினமும் தன்னையும் நோயாளியாக்கி மற்றவர்கள் நெஞ்சத்தையும் புண்படுத்தி விட்டதை உணர்ந்தார். தன் சினத்தைக் கைவிடுவது எல்லோருக்கும் நன்மை பயக்கும் என்பதை உணர்ந்து சோகமே கட்டிலில் இருந்து எழும்ப முயற்சி செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற இதழின் தொடர்ச்சி....

# சைவபூஷணம்

## தமிழ் விளக்கம்

36. சற்குரு என்னும் அபிஷேகமும் கிரியையுமாகிய இரண்டும் சிறந்ததும், ஆகமத்தில் ஆற்றலும், கிரியை செய்வதில் சமர்த்தும், சிவனிடத்தும் குருவினிடத்தும் பக்தி சிரத்தையும், உபசாந்தியும், சகல உயிர்களிடத்தும் கிருபையும் சகல ஜனங்களுக்கும் பிரியமான வசனமும், நல்ல ஸௌந்தர்யமும் இலக்ஷண சம்பத்தியும், அங்கங்களில் குற்றமின்றி இலக்ஷணமும், பதினாறு வயதிற்கு மேற்பட்ட பௌவனமும் உடையவனை சற்குருவென்று, அவனே தீக்ஷை செய்விப்பதற்குரிய குருவாவான் என்க.

(அ-கை) அசற்குரு இலக்கணம் இதுவென்று கூறுகின்றார்.

37. உலகத்தில் சிலர் மந்திர தந்திர கிரியா சாதுரியங்களையும் நல்ல சம்பிரதாயமாகிய பரம்பரையான உபதேசங்களையும் சற்குரு முகமாகக் கனவிலும் அறியப்படாத ஆற்றல் இல்லாதிருக்கவும், மாயேந்திரம் முதல் காட்சிகளைப் பிறர் பிரமிக்கும்படி அற்புதங்களைத் தரித்துக் கொண்டு வேஷத்தாலும் சொல்லாலும் நல்லவர்கள்போலக் காட்டி, சிஷ்யர்களுடைய பொருள்களைத் திருடர்கள்போல் அபகரிப்பதே அன்றி அவர்களின் மனதிற்குத் துன்பத்தையும் உண்டு பண்ணுவார்கள் இவர்கள் அசற்குரு என்க.

(அ-கை) நன்மாணாக்கர்களிலக்கணமிது வென்று கூறுகின்றார்.

38. நன்மாணாக்கர்களுக்கு அனேக நல்ல குணங்களிருத்தல் வேண்டும். அவற்றுள் பதின்மூன்று குணங்கள் சிறந்தனவாகும் அவை வருமாறு: தெய்வம் உண்டென்னும் திடபுத்தி, சிவனிடத்தும் சிவனடியாரிடத்தும் அன்புடைமை, சமயத்துரோகம், சிவத்துரோகம், குருத்துரோகம் இல்லாமை, அருளாக்கிய பரிபாலனம், கோபமில்லாமை, தன்னிடத்துள்ள குற்றத்தைத் தெரிதல், ஆசிரியரிடத்துள்ள குற்றத்தைத் தெரியாமை, ஆசிரியரிடத்து அன்புடைமை, செய்நன்றி, தீயவரோடிணங்காமை, விவேகமுடைமை என்பனவாம்.

(அ-கை) சிஷ்யர்களின் பேதம் பதின்மூன்று என்று கூறுகின்றார்.

39. அத்யாலோகன், பாலகன், நிராகாரி, பிரமாதி, அற்புதன், சியாமவர்ணன், பாலகன், அநுமதி தாமசன், சத்திர பிருத், பௌரேயன், விசாலி, சாலவன் எனச் சிஷ்யர்கள் பதின்மூன்று பிரிவினர் ஆவரென்று மதங்க பரமேஸ்வர ஆகமத்திற் கூறப்பட்டிருக்கிறது.

(அ-கை) சிஷ்யனாகாதவன் இலக்கணமிதுவென்று கூறுகின்றார்.

40. சாதியினாலே பெரியவனாயிருந்தாலும், இழிந்த தொழிலையுடையவனாயும், அன்னத்தையும் வித்தையையும் விற்கிறவனாயும், ஆசிரியர், தாய், தந்தை, மூத்தோர் சிவனடியார் ஆகிய இவர்களிடத்தில் பக்தி இல்லாதவனாயும், மூர்க்கனாயும், கோபனாயும், விவேகமில்லாதவனாயும் குலப்பிரஷ்டனாயும், புலாலுண்பவனாயும் உள்ளவன் எப்பொழுதும் சிவதீக்ஷைக்குரியவனல்லன். பொருளாசையால் இவனுக்குச் சிவதீக்ஷை செய்தானாயின், செய்துவைத்த குருவும் பெற்றுக் கொண்ட சிஷ்யனும் ஆகிய இருவரும் நரகத்திற் கிடப்பார்களென்று காமிகமென்னும் ஆகமத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. (40, 41)

(அ-கை) தீக்ஷைபெறுதற்குரியவர் இவரெனக்கூறுகின்றார்.

42. தீக்ஷைபெறுதற்குரிய சற்பாத்திரர் எவரெனில், வித்தை தபசு என்னும் இந்த இரண்டும் எவனிடத்தில் விளங்குகின்றனவோ, அவனே சற்பாத்திரனென்று பெரியோர்கள் கூறுகின்றனர். இவ்வாறே ஹேமாத்ரி கண்டத்திலும் சொல்லியிருக்கின்றது. அவற்றுள் வித்தையாவது, நித்திய அநித்திய பொருள்களின் ஞானத்தை உண்டுபண்ணிச் சுகத்தைத்தருங் கல்வியாம். தபசாவது, நித்திய கர்மங்களோடு கூடி அனைவரும் அதிசயிக்கும் வண்ணம் ஒழுகும் நல்லொழுக்கமாம் என்க.

(அ-கை) கர்மங்களின் பிரிவைக் கூறுகின்றார்.

மிகுதி அடுத்த இதழில்.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**[illegible]**

**சுபானு**
**ஆவணி**

| | | | |
|---|---|---|---|
| 01 | 18-08-2003 | திங்கட்கிழமை | மாதப்பிறப்பு |
| 03 | 20-08-2003 | புதன்கிழமை | கார்த்திகை விரதம் |
| 07 | 24-08-2003 | ஞாயிற்றுக்கிழமை | ஆவணி ஞாயிறு |
| 08 | 25-08-2003 | திங்கட்கிழமை | பிரதோஷ விரதம், செருத்துணையார் குருபூஜை |
| 09 | 26-08-2003 | செவ்வாய்க்கிழமை | புகழ்த்துணையார் குருபூஜை, அதிபத்தர் குருபூஜை |
| 10 | 27-08-2003 | புதன்கிழமை | அமாவாசை விரதம், இளையான்குடி மாறர் குருபூஜை |
| 12 | 29-08-2003 | வெள்ளிக்கிழமை | மறை ஞான சம்பந்தர் குருபூஜை |
| 14 | 31-08-2003 | ஞாயிற்றுக்கிழமை | விநாயகர் சதுர்த்தி விரதம், ஆவணி ஞாயிறு |
| 15 | 01-09-2003 | திங்கட்கிழமை | ரிஷி பஞ்சமி, ஷஷ்டி விரதம் |
| 17 | 03-09-2003 | புதன்கிழமை | குலச்சிறையார் குருபூஜை |
| 19 | 05-09-2003 | வெள்ளிக்கிழமை | ஆவணி மூலம், குங்கிலியக்கலயர் குருபூஜை |
| 21 | 07-09-2003 | ஞாயிற்றுக்கிழமை | ஆவணி ஞாயிறு |
| 22 | 08-09-2003 | திங்கட்கிழமை | பிரதோஷ விரதம், ஆவணி ஓணம் |
| 23 | 09-09-2003 | செவ்வாய்க்கிழமை | நடேசராபிஷேகம் |
| 24 | 10-09-2003 | புதன்கிழமை | பூரணை விரதம் |
| 25 | 11-09-2003 | வியாழக்கிழமை | மஹாளய பக்ஷாரம்பம் |
| 28 | 14-09-2003 | ஞாயிற்றுக்கிழமை | சங்கடஹர சதுர்த்தி விரதம், ஆவணி ஞாயிறு |
| 29 | 15-09-2003 | திங்கட்கிழமை | மஹாபரணி |
| 30 | 16-09-2003 | செவ்வாய்க்கிழமை | கார்த்திகை விரதம் |


எங்களிடம்,

ஐம்பொன், வெள்ளி, பஞ்சலோகம் வார்ப்பு விக்கிரகங்கள், வீட்டுப்பூசைப் பொருட்கள், கலைநயம் மிக்க சிலா விக்கிரகங்கள், கோபுரக்கலசங்கள், பட்டுக் குடைகள், கும்பக்குடைகள், சந்திரவட்ட, பூச்சக்கரக் குடைகள், ஆலவட்டம், சுருட்டி மகர தோரணம், திரைச்சீலைகள், வெள்ளி, முத்து, கிரீடங்கள், வாகன மாலை மற்றும் மின்சார மங்கள வாத்தியங்கள், இந்திய கலைத்திறம் படைத்த குத்து விளக்குகள், வீட்டு அலங்காரப் பொருட்கள் குறைந்த விலையில் கிடைக்கும்.

# கலையரசி

**23/1, விவேகானந்த மேடு, கொழும்பு-13. தொ.பே: 478885**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# People might make boxes the size of houses...



# ...but they can't beat the UPS service!

UPS ®

**As sure as taking it there yourself**
**Tel: 337773**

# *IML (PVT) LTD*

**For All Your Courier Needs**
**United parcel Service**
## "UPS House"

*209/2, Union Place,*
*Colombo-02.*
***Call us on 337773, 328793***
***074-721720 Fax: 434287***

Regd. No. QD/48/News 2003 இவ்விதழ் சைவநீதி நிறுவனத்தினரால் லக்ஷ்மி அச்சகத்தில் அச்சிட்டு 24-07-2003 இல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org